விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
Viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 25 ஞாயிற்றுக்கிழமை (07.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 171

## அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணிய மாட்டேன்

### மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

என்னை ஒருபோதும் அரசியல் அழுத்தங்களால் அடிபணிய வைக்க முடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

எந்தக் காலப்பகுதியிலும் எனக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவில்லை. அழுத்தங்களைப் பிரயோகித்தாலும் அதற்கு அடிபணிபவன் நான் அல்லன் என்பதும் அனைவருக்கும் தெரியும். நான் என்ன செய்வேன் என்பது

15

## மக்களுக்கு ஒரு மாபெரும் சக்தியாக மகிந்த விளங்கினார்

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் புகழாரம்



(கொழும்பு)

மக்களுக்கு ஒரு மாபெரும் சக்தியாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விளங்கினார் என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் புகழாரம் சூட்டியுள்ளார்.

அரசியலில் 50 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு பாராட்டுத் தெரிவித்து ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15

## தேர்தலுக்கான ஒத்திகை

### வாக்களிப்பு இன்று

(கொழும்பு)

இன்று ஞாயிற்றுக்கிழமை பொதுத் தேர்தலை நடத்துவதற்கான வாக்களிப்பு ஒத்திகையை அம்பலாங்கொடையில்

15

## வட மாகாணத்தில் மழை பெய்யக் கூடிய சாத்தியம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் இன்று மழைபெய்யக்கூடியசாத்தியம்காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புத்தளத்திலிருந்து கொழும்பு ஊடாக காலி வரையான

15

# யாழ்.போதனாவில் குடும்பப் பெண் மரணம்



## எலிக்காய்ச்சல் என சந்தேகம்?

(யாழ்ப்பாணம்)

ஒருவிதமான வைரஸ் காய்ச்சல் காரணமாக குடும்பப் பெண் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று மரணமடைந்துள்ளார். எலிக்காய்ச்சல் தொற்று ஏற்பட்டிருக்குமோ என்ற சந்தேகத்தில் இவரின் இரத்த மாதிரிகள் கொழும்பிற்கு பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

### விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணி

## ஐ.நா.வதிவிடப் பிரதிநிதியை சந்திக்கத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, ஐக்கிய நாடுகள் வதிவிடப்பிரதிநிதி உட்பட முக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்களை விரைவில் சந்திப்பதென தீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணியின் பங்காளிக்கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள்

15

## மின்சாரக் கம்பி லொறி மீது அறுந்து வீழ்ந்ததில்

### இரு இளைஞர்கள் பலி

(மாத்தளை)

லொறியொன்றின் மீது அதி உயரழுத்தம் கொண்ட மின் கம்பி அறுந்து வீழ்ந்ததில் மின்சாரம் தாக்கிய இரு இளைஞர்கள் பரிதாபமாகப் பலியாகியுள்ளனர்.

குறித்த சம்பவம், மாத்தளை மகவெலப் பகுதியில் நேற்றுப் பகல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், மாத்தளை மகவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடவுள்பத்த கதமுனாகல பகுதி

15

## சுகாதார அமைச்சின் பரிந்துரையால் தேர்தல் மேலும் தள்ளிப் போகலாம்




(கொழும்பு)

பாராளுமன்ற பொதுத் தேர்தலை ஓகஸ்ட் மாத இறுதியில் அல்லது அதற்கு பின்னர் ஒரு தினத்தில் நடத்த நேரிடும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முடிந்தளவில் விரைவில் தேர்தலுக்கு சென்று எப்படியாவது தேர்தலை நடத்த வேண்டும்என்ற தேவை ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு இருந்தாலும் சுகாதார அமைச்சின் பரிந்துரைகளுக்கு அமைய தேர்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க குறிப்பிடத்தக்க காலம் தேவை என்பதால் தேர்தல் நடத்தப்படும் தினம் மேலும் தள்ளி போகலாம்

15

| கொரோனா வைரஸ் | பாதிப்பு | 1814 | புதிய தொற்றாளர்கள் | 13 | பலி | 11 |
|---|---|---|---|---|---|---|

## சேலை அழகு என்பதற்காக அழகு ராணிப் போட்டியில் வெற்றி பெற முடியாது - ரணில்

03

## தந்தை மகள் உட்பட மூவர் நீரில் மூழ்கிப் பலி

### பதுளையில் பரிதாபம்

(பதுளை)

பதுளை - மடுல்சீமைப் பகுதியில் நீரில் மூழ்கி மூவர் உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது. இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் (வயது-38) மகளும் (வயது-12)

15

### தனிமைப்படுத்தல் சட்டத்தை

## நாட்டிற்கு வருவோர் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்


### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்று காரணமாக நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்டமானது நாட்டிற்கு வருகை தருபவர்கள், நாட்டிலுள்ள அனைத்துப் பிரஜை

15

# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை குணதர்மபாலன்

### ("தேனருவி" அல்வாய் வடக்கு, அல்வாய்)

"தேனருவி" அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் Nurnberg west, Ferienderf mutte sal ஜேர்மனியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை குணதர்மபாலன் அவர்கள் கடந்த 04.06.2020 ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பவழம் தம்பதியரின் அன்பு மகனும் அமரர்களான பாலசிங்கம் - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் திருமதி இரத்தினஜோதியின் அன்புக் கணவரும் திருமதி தாட்சன்யாவின் (அமுதா) பாசமிகு தந்தையும் அமரர்களான சிவபாதம், இராஜரட்ணம் மற்றும் மகாதேவன், நவரட்ணராஜா (ரவி), செல்வராஜா (அப்பு), கணேசலிங்கம் ஆகியோரின் பாசமுள்ள சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2020) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெற்று பூதவுடல் அன்றைய தினம் மதியம் 12.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"தேனருவி"
அல்வாய் வடக்கு, அல்வாய்.
தொ.பே:- 076 438 7542

(C-9674)

தகவல்:-
க.மகாதேவன்
(சகோதரன்)

## மணல் விற்பனை தொடர்பில்

# 24 மணி நேரத்தில் 200 முறைப்பாடுகள்

(கொழும்பு)

மணல் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக கடந்த 24 மணி நேரத்தில் சுமார் 200 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில், பணியகத்தின் தலைவர் அனுர வால்போலா தெரிவித்ததாவது,

மணல் அதிக விலைக்கு விற்கப்படுவது தொடர்பில் முறைப்பாட்டை வழங்குமாறு கோரப்பட்டிருந்தது.

அதனடிப்படையிலேயே நேற்று முனதினம் மாலை வரை சுமார் 200 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளின் பினனர் வாகன உரிமையாளர்களின் மணல் அகழ்வு மற்றும் போக்குவரத்து அனுமதிகள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

மணலை அதிக விலைக்கு விற்பனை செய்வோர் தொடர்பில் 071 53 52 304 என்ற தொலைபேசி எண்ணுக்கு அறிவிப்பதன் ஊடாக எம்மால் நடவடிக்கை எடுக்க முடியும் என்றார். (ம-3)


## சொர்க்கம் திருமண சேவை

அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் மணமகன்களுக்கு தகுந்த மணமகள்களைத் தேடுகிறோம். டென்மார்க்கில் வாழும் 30 வயதுடைய டொக்டர் மணமகளுக்கு இலங்கையில் தகுந்த மணமகனைத் தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு:-
**0014166661855, 0776505097**
**www.sorkham.com**
(2962)

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்**
(2961)

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**


# மரண அறிவித்தல்

## திருமதி
## லிங்கேஸ்வரி சதீஸ்குமார்

| அன்னை மடியில் | காலனின் பிடியில் |
|---|---|
| 19.11.1979 | 06.06.2020 |



வண்.வடமேற்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லிங்கேஸ்வரி சதீஸ்குமார் அவர்கள் நேற்று (06.06.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னலிங்கம் - சரோஜாதேவி தம்பதிகளின் புதல்வியும் அமரர் ஜெகநாதன் - ரதி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் சதீஸ்குமாரின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - நல்லூர் பிரதேச செயலகம்) அன்பு மனைவியும் கிருஷிகன், ஸிவானி ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேந்திரன் (சந்திரன்), நகுலேஸ்வரன் (நகுலன்) ஆகியோரின் சகோதரியும் றஜனி, கந்தவேள், ஜினோதா, கேமலதா, இந்துசன் ஆகியோரின் மைத்துனியும் வதனி, சுதாகரன், கேசவன், குஜேந்தினி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2020) ஞாயிற்றுக்கிழமை வண்.வடமேற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பத்திரகாளி கோவில் வீதி,
வண் வட மேற்கு, யாழ்ப்பாணம்.

(C-9675)

தகவல்:- குடும்பத்தினர்
தொ.பே:- 077 887 9812, 077 625 8162

# பாராளுமன்றம் கூடும் திகதியை ஜனாதிபதி அறிவித்தே ஆக வேண்டும்

- தேர்தலை ஒத்திவைக்குமாறு யாரும் கோரவில்லை
- தள்ளுபடியான மனுக்கள் ஐ.தே.கவினுடையதல்ல
- ஜனாதிபதியின் அறிவித்தல் செல்லுபடியாகுமா? இல்லையா? இதுவே எமது கேள்வி



## — தெளிவுபடுத்துகிறார் ரணில் —

(கொழும்பு)

**சேலை அழகு என்பதற்காக அழகுராணிப் போட்டியில் வெற்றிபெற்று விட முடியாது. எனவே தேர்தல் குறித்து கூடிய அவதானம் செலுத்தி செயற்பட வேண்டும். தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் ஐக்கிய தேசியக் கட்சி தாக்கல் செய்தவையாகவே மக்கள் கருதுகின்றனர். எனவே மக்கள் மத்தியில் உண்மை நிலையினைக் கொண்டு செல்ல வேண்டும் என ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

ரணில் விக்கிர்மசிங்கவின் கொள்ளுப்பிட்டிய இல்லத்தில் இடம்பெற்ற கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில், ஐ.தே.க. மாத்திரமல்ல தேர்தலை ஒத்திவைக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி என்பன கூட நீதிமன்றம் செல்லவில்லை.

ஏனெனில் அரசியல் கட்சி என்ற வகையில் எம்மால் தேர்தலை ஒத்திவைக்குமாறு நீதிமன்றம் செல்ல இயலாது.

மாறாக தேர்தல் குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கே உள்ளது. அதனை அவர்கள் செய்துள்ளனர். ஆனால் அரசியலமைப்பு ரீதியான வியாக்கியாணத்தையே நீதிமன்றம் ஊடாக பெற்றுக்கொள்ள நாம் முற்பட்டோம். அங்கு எமக்கு சட்ட ரீதியானதொரு கருத்து காணப்பட்டது.

அதாவது பொதுத்தேர்தலுக்கான அறிவிப்பை ஜனாதிபதி அறிவித்ததன் பின்னர் மூன்று மாதத்திற்குள் தேர்தல் இடம்பெறாவிடின், அன்றிலிருந்து ஜனாதிபதியின் அறிவித்தல் செல்லுபடியாகுமா? இல்லையா? என்பதையே நாம் அறிய விரும்பினோம்.

ஆனால் நீதிமன்றத்தை நாடியவர்கள் இவ்வாறானதொரு விடயம் குறித்து கவனத்தில் கொண்டிருக்கவில்லை. வெறும் அரசியல் நோக்கமே இங்கு காணப்பட்டது.

எனவே தான் நாம் நீதிமன்ற விடயத்தில் பின்வாங்கியிருந்தோம். ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவிப்பு காலாவதியாகியுள்ளது. தேர்தல் குறித்து தேர்தல் ஆணைக்குழுவே தீர்மானிக்க வேண்டும்.

அரசியலமைப்பை மீறாது பாதுகாக்க வேண்டுமாயின் பாராளுமன்றத் தேர்தலுக்கான மற்றுமொரு அறிவித்தலை ஜனாதிபதி விடுக்க வேண்டும். அத்துடன் பாராளுமன்ற அமர்வை ஓகஸ்ட் வரை ஒத்தி வைத்து தேர்தலுக்கு செல்ல வேண்டும்.

அவ்வாறில்லையெனில் அரசியலமைப்பு ரீதியில் நெருக்கடியான விடயமாகி விடும். எவ்வாறாயினும் பாராளுமன்றம் மீண்டும் கூடும் திகதியை ஜனாதிபதி அறிவித்தே ஆக வேண்டும்.

ஆகவே தேர்தல் குறித்து நாம் அவதானத்துடன் செயற்பட வேண்டும். கட்சி என்ற ரீதியில் எமக்குள்ள பொறுப்புகளை தேர்தல் வெற்றிக்காக முழு அளவில் செயற்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# பொதுமக்களின் விபரம் சேகரிக்கிறது பொலிஸ் கூடச் செல்லும் மர்ம நபர்கள் யார்?

## தேர்தல் வன்முறைகள் கண்காணிக்கும் நிலையம் கேள்வி

(கொழும்பு)

தேர்தல் தருணத்தில் பொலிஸார் பொதுமக்களின் விபரங்களை சேகரிப்பது ஏன் என தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் கேள்வி எழுப்பியுள்ளது.

பொலிஸாருடன் இணைந்து பொதுமக்களின் விபரங்களை சேகரிப்பதில் ஈடுபட்டுள்ள இனந்தெரியாத நபர்கள் யார் எனவும் அந்த நிலையம் கேள்வியெழுப்பியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் பதில் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஒன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பொலிஸாருடன் இணைந்து செயற்படும் நபர்கள் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் என்பதை அடையாளம் கண்டுள்ளதாக தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுள பஸ்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் சட்டத்தின் கீழ் பொதுமக்களின் விபரங்களை சேகரிக்கும் உரிமை பொலிஸாருக்குள்ளது எனத் தெரிவித்துள்ள அவர், இனந்தெரியாத நபர்கள் பொலிஸாருடன் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபடுவது குறித்து தங்களிற்கு தகவல் கிடைத்துள்ளது என அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு தேர்தல் சூழ்நிலையில் காணப்படுவதால் பொலிஸாருக்கு இந்த நடவடிக்கையில் உதவுபவர்களை அடையாளம் காணுவது அவசியம் என தெரிவித்துள்ள அவர், பொதுமக்களின் விபரங்கள் சேகரிக்கப்படுவது மற்றும் பொலிஸாருக்கு உதவும் நபர்கள் யார் என்பது குறித்து இலங்கை பொலிஸ் உத்தியோகபூர்வ அறிக்கையொன்றை வெளியிட வேண்டும் எனவும் அவர் அந்தக் கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஜ-4)

## ஜேர்மனியிலிருந்து 236 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனாத் தொற்று காரணமாக ஜேர்மனியில் நிர்க்கதிக்குள்ளாகியிருந்த வெளிநாட்டுக் கப்பல்களில் பணிபுரியும் 236 பேர் நேற்று நாட்டை வந்தடைந்தனர். இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான யு.எல் 1206 எனும் விமானத்தின் மூலம் ஜேர்மனியின் கம்போக் விமான நிலையத்திலிருந்து அழைத்து வரப்பட்டனர். குறித்த கப்பல் ஊழியர்கள் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் தனிமைப்படுத்தல் நில்லயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக கடற்படை ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (ஜ-8)

# இனவாத ரீதியாக செயற்படும் அரசாங்கம்; தமிழர்களும் முஸ்லிம்களும் புறக்கணிப்பு

## — முஜிபுர் குற்றச்சாட்டு —

(கொழும்பு)

அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்தே இனவாத ரீதியில் செயற்பட்டு வருவதாக குற்றஞ்சாட்டிய ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுவரும் எந்தக் குழுவிலும் தமிழரையோ, முஸ்லிம்களையோ அங்கத்துவராக நியமிக்கவில்லை என்றும் அரசாங்கம் அவர்களை புறக்கணித்தே வருகின்றது எனவும் குற்றஞ்சாட்டினார்.

நேற்று முன்தினம் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதியின் செயலணி குறித்து அவரிடம் வினவிய போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போதைய அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே இனவாதத்துடனே செயற்பட்டு வருகின்றது. ஜனாதிபதி கோட்டாபயவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மற்றும் அவரது பதவியேற்பு தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அவ்வாறே அமைந்துள்ளன.

கிழக்கு மாகாணத்தின் தொல்பொருளியல் பாதுகாப்பு செயலணியில் மாத்திரமல்ல ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட எந்த அணிகளிலுமே தமிழரோ முஸ்லிம்களோ உறுப்பினர்களாக இணைத்துக் கொள்ளப்படவில்லை.

இவர்கள் இன பேதத்தை முன்னிலைப்படுத்தியே செயற்பட்டு வருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் செறிவாக வாழ்ந்து வருகின்றபோதில் அவர்களுள் ஒருவரையாவது இணைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் ஜனாதிபதி அதனை கருத்திற் கொள்ளவில்லை. ஆரம்பத்திலிருந்தே இனவாத செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் இவர்கள் தொடர்ந்தும் தமிழர்களையும் முஸ்லிம்களையும் புறக்கணித்தே வருகின்றனர். இது கவலைக்குரிய விடயமாகும். இதனையே நாங்கள் பலதடவை தெரிவித்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்காக 08.06.2020 -14.06.2020 வரையான Zoom வகுப்பு நேர அட்டவணை

| காலம் | நேரம் | பாடம் | Meeting ID | ஆசிரியர் விபரம் பாடசாலை |
|---|---|---|---|---|
| திங்கள் | 6.00-7.00 மு.ப. | தமிழ் | Meeting ID 2491568241 | ஆர்.சுகனன் (முல்/இரணைப்பாலை றோ.க.ம.வி)<br>க.மு.நித்தி (யா/ சென்.பற்றிக்ஸ் கல்லூரி)<br>ரி.நித்தியானந்தம் (யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்)<br>எம்.கஜீபன் (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி)<br>எஸ்.கோபிநாத் (யா/ சென்.பற்றிக்ஸ் கல்லூரி)<br>ஜெ.ஜெயகணேஸ் (யா/ சென்.பற்றிக்ஸ் கல்லூரி)<br>வி.ரவீந்தர் (யா/வயாவிளான் மத்திய கல்லூரி) |
| | 7.00-8.00 மு.ப. | விஞ்ஞானம் | | |
| | 3.00-4.00 பி.ப. | கணிதம் | | |
| செவ்வாய் | 6.00-7.00 மு.ப. | ICT | | |
| | 7.00-8.00 மு.ப. | விஞ்ஞானம் | | |
| | 3.00-4.00 பி.ப. | வரலாறு | | |
| புதன் | 6.00-7.00 மு.ப. | தமிழ் | | |
| | 7.00-8.00 மு.ப. | கணிதம் | | |
| வியாழன் | 6.00-7.00 மு.ப. | ICT | | |
| | 7.00-8.00 மு.ப. | விஞ்ஞானம் | | |
| | 3.00-4.00 பி.ப. | கணிதம் | | |
| வெள்ளி | 6.00-7.00 மு.ப. | கணிதம் | | |
| | 7.00-8.00 மு.ப. | ICT | | |
| சனி | 7.00-8.00 மு.ப. | கணிதம் | | |
| | 6.00-7.00 மு.ப. | வரலாறு | | |
| ஞாயிறு | 6.00-7.00 மு.ப. | விஞ்ஞானம் | | |
| | 7.00-8.00 மு.ப. | கணிதம் | | |
| | 3.00-4.00 பி.ப. | வரலாறு | | |

# வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா தெற்கு, க.பொ.த. உயர்தர தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களுக்கான Zoom வகுப்பு நேர அட்டவணை

| காலம் | நேரம் | பாடம் | ஆசிரியர் | பாடசாலை | Meeting ID | PWD |
|---|---|---|---|---|---|---|
| 08.06.2020 திங்கள் | 4.00-5.15 மு.ப. | SFT ஆள்கூற்றுக் கேத்திரகணிதம் | என்.சஜிப்பிரசாத் | வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி | 841 8101 1640 | SFT&67 |
| | 5.15-6.30மு.ப. | ET Electrical& Electronics | எஸ்.மயூரதன் | மு/முசலி தேசிய பாடசாலை | 894 0112 5789 | ET&65 |
| | 5.15-6.30 மு.ப. | BST Paper Class | பி.எப். ரதீந்திரகுமார் | மட்/மகாஜனக் கல்லூரி | 865 2262 0860 | BST&66 |
| | 8.00-9.00 பி.ப. | AGRI Paper Class | பி.எப். ரதீந்திரகுமார் | மட்/மகாஜனக் கல்லூரி | 881 1659 5423 | AGRI&08 |
| | 8.00-9.00 பி.ப. | ICT Paper Class | என்.சுவேதன் (அதிபர்) | வ/நீலியமோட்டை சிவப்பிரகாச வித்தி. | 839 9770 9336 | ICT&20 |
| 09.06.2020 செவ்வாய் | 4.00-5.15 மு.ப. | BST Electronics &Instrumentation | என்.சஜிப்பிரசாத் | வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி | 865 2262 0860 | BST&66 |
| | 4.00-5.15 மு.ப. | ET Paper Class | எஸ்.பஸ்லீன் | வ/செட்டிக்குளம் மகாவித்தியாலயம் | 894 0112 5789 | ET&65 |
| | 5.15-6.30 மு.ப. | AGRI Paper Class | எ.ஜோன் | வ/செட்டிக்குளம் மகாவித்தியாலயம் | 881 1659 5423 | AGRI&08 |
| | 5.15-6.30 மு.ப. | ICT Paper Class | வி.கஜன் | வ/விபுலாநந்தா கல்லூரி | 839 9770 9336 | ICT&20 |
| | 9.30-11.00 பி.ப. | SLT Paper Class | என்.சஜிப்பிரசாத் | வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி | 841 8101 1640 | SFT&67 |
| 10.06.2020 புதன் | 4.00-5.15 மு.ப. | SFT ஆள்கூற்றுக் கேத்திரகணிதம் | என்.சஜிப்பிரசாத் | வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி | 841 8101 1640 | SFT&67 |
| | 5.15-6.30மு.ப. | ET Electrical& Electronics | எஸ்.மயூரதன் | மு/முசலி தேசிய பாடசாலை | 894 0112 5789 | ET&65 |
| | 5.15-6.30 மு.ப. | BST Paper Class | பி.எப். ரதீந்திரகுமார் | மட்/மகாஜனக் கல்லூரி | 865 2262 0860 | BST&66 |
| | 9.30-11.00 பி.ப. | ET Practical Class | எஸ்.பஸ்லீன் | வ/செட்டிக்குளம் மகா வித்தியாலயம் | 894 0112 5789 | ET&65 |
| | 9.30-11.00 பி.ப. | BST Practical Class | என்.சஜிப்பிரசாத் | வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி | 865 2262 0860 | BST&66 |

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் வழிகாட்டலில் வலயக்கல்வி பணிமனை-வவுனியா தெற்கு இனால் Zoom ஊடாக தொழில்நுட்பப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

காலம் 07.06.2020 நேரம் 4.00 பி.ப Meeting ID-831 7203 2782 Password-teach@2020 மேலதிக விபரங்களுக்கு 077 112 3227 எனும் தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.

# பி.சி.ஆர். பரிசோதனை; 72 ஆயிரத்தை கடந்தது

(கொழும்பு)

நாட்டில்இதுவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை 72 ஆயிரத்தைக் கடந்தது.

நேற்று முன்தினம் மாத்திரம் ஆயிரத்து 896 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதற்கமையஇதுவரை மொத்தமாக 72 ஆயிரத்து 180 பி.சி.ஆர்.பரிசோதனைகள்மேற்கொள்ளப்பட்டதாக சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது. (ஜ-8)

# ஊரடங்கை மீறிய ஆயிரத்து 490 பேர் கைது

(கொழும்பு)

ஊரடங்கை மீறிய குற்றச்சாட்டின் பேரில் ஆயிரத்து490 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் 498 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி தொடக்கம் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட இதுவரையான காலப்பகுதியில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 70 ஆயிரத்து 42 பேர் கைது செய்யப்பட்டுளளதோடு அவர்கள் பயணித்த 19 ஆயிரத்து 856 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

அத்துடன் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 25 ஆயிரத்து 942 பேருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

## இராசிபலன்

07.06.2020
வைகாசி 25, ஞாயிற்றுக்கிழமை
துதியை முன்னிரவு 11.06 மணிவரை
மூலம் பிற்பகல் 4.19 மணிவரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை
சந்திராஷ்டமம்: கார்த்திகை , ரோகிணி
திருஞானசம்பந்தர் குருபூசை

வளவன்

**மேஷம்** – அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**ரிஷபம்** – குடும்பத்தினரிடையே சிறு சிறு மனஸ்தாபங்கள் ஏற்படலாம், உடல்நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், விரயங்கள் மேலோங்கும் நாள்.

**மிதுனம்** – நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கடகம்** – பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்** – பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பிறருக்கு உதவ முற்படுவீர்கள்.

**கன்னி** – குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்** – எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** – நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு** – சோம்பலை விலக்குவது நல்லது, எதிர்பாராத காரியம் ஒன்று நடைபெற்று இன்பம் தரும், தேகநலனில் கவனம் தேவை, சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

**மகரம்** – தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்கள் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, சஞ்சலங்கள் சற்று கூடும்.

**கும்பம்** – செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், தொழிலில் புதியவர்களை இணைக்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்.

**மீனம்** – உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தூரதேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

உணர்ச்சி மட்டுமே தன்னை விஞ்சச் செய்யும்

# நாட்டில் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை பலமான அரசு தோற்றம் பெற்றால் மீட்டெடுக்கலாம்

## ரமேஷ் பத்திரண சுட்டிக்காட்டு



(கொழும்பு)

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தினையும் முன்னேற்றும் பாரிய சவால் உள்ளது. பொதுத்தேர்தல் ஊடாக பலமான அரசாங்கம் தோற்றம் பெற்றால் மாத்திரமே அச் சவால்களை வெற்றி கொள்ள முடியுமென பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா வைரஸ் தாக்கத்தினால் ஜனாதிபதி திகதி குறிப்பிட்ட தினத்தில் பொதுத் தேர்தலை நடத்த முடியாத நிலை தோற்றம் பெற்றது.

பொதுத் தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஜனநாயகத்தை பாதுகாத்துள்ளது.

பொதுத்தேர்தலை நடத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் பரவலை முழுமையாக இல்லாதொழிக்க அரசாங்கம் தொடர்ந்து நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை துரிதமாக முன்னேற்றுவது அரசாங்கத்திற்கு உள்ள பிரதான சவாலாகும். மறுபுறம் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

பொதுத்தேர்தல் ஊடாக பலமான அரசாங்கம் தோற்றம் பெற்றால் மாத்திரமே ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சிமாற்றத்தின் நோக்கம் நிறைவேறும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# இலங்கை பொதுப்போக்குவரத்து சேவை ஊழியர்களுக்கு சீனா மருத்துவ பாதுகாப்பு உபகரணங்கள் நன்கொடை

(கொழும்பு)

நாட்டின் பொதுப்போக்குவரத்து சேவை நாளை திங்கட்கிழமை முதல் வழமைக்குத் திரும்பவுள்ள நிலையில், பொதுப்போக்குவரத்து சேவை ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் பெருமளவு மருத்துவ பாதுகாப்பு உபகரணங்களை சீனா நன்கொடையாக வழங்கியுள்ளது.

கொவிட் - 19 கொரோனா வைரஸ் பரவல் காரணமாக முடக்கப்பட்டிருந்த நாட்டின் பொதுப்போக்குவரத்து சேவை நாளை திங்கட்கிழமை வழமைக்குத் திரும்புகின்றது.

இதன்போது பொதுப்போக்குவரத்து சேவையில் பணிபுரியும் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் போக்குவரத்து அமைச்சால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நாட்டின் பொதுப்போக்குவரத்து ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அரசாங்கத்திற்கு உதவும் விதமாக சீனா தேசிய உபகரண இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் ஆயிரம் சுயபாதுகாப்பு அங்கிகள், 60 ஆயிரம் சத்திர சிகிச்சை முகக்கவசங்கள், 15 ஆயிரம் கே.என் 95 முகக்கவசங்கள் மற்றும் 500 கையுறைகளை இலங்கைப் போக்குவரத்து அமைச்சிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளது. (ஜ-4)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




தோற்றம்
07.10.1942

மறைவு
07.06.2019

## அமரர் பிரான்சிஸ் அல்பிரட் துரைசிங்கம் (ஜே.பி)

(வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் முன்னைநாள் ஆலோசகரும் ஓய்வுநிலை தொழிற் திணைக்கள பதில் ஆணையாளரும்)



எமது குடும்பம் சிறப்பாக வாழ வழிசமைத்தது மட்டுமல்லாமல் தங்கள் உறவுகளின் குடும்பங்களையும் வாழ வழிசமைத்துக் கொடுத்த உங்களை ஓராண்டு சென்றாலும் மறக்க முடியுமா? புனித பிரான்சிஸ்கு சலேசியாரின் ஆசியுடனும் அருளுடனும் எமது ஒளிமயமான வாழ்வுக்கு உழைத்தீரே... உமது ஆத்மா இறையடி பணிய பிரார்த்திக்கின்றோம்.

ஈர விழிகளுடன்...
மனைவி, மகன் குடும்பத்தினர்.
(தென்னாபிரிக்கா)

குறிப்பு:
அன்னாரின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு சாங்கானை J/180 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதி வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தில் காலை 10.00 மணியளவில் வழங்கப்படும்.

# கொரோனாவைத் தொடர்ந்து வெட்டுக்கிளி உலகிற்குச் சோறுபோடும் விவசாயியின் வாழ்க்கை சுமையாகிவிடக்கூடாது



## கரு ஜெயசூரிய டுவிட்

(கொழும்பு)

**நாட்டின் தற்போது புதிய சவாலாக மாறியிருக்கும் வெட்டுக்கிளிகளின் தாக்கம் தொடருமாக இருந்தால் ஏற்கனவே சுகாதார மற்றும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கும் விவசாயிகளின் வருமானமார்க்கம் பெரிதும் பாதிக்கப்படும் நிலை உருவாகும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய சுட்டிக்காட்டினார்.**

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்திலேயே கரு ஜெயசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொவிட் - 19 கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து தற்போது வெட்டுக்கிளிகளின் படையெடுப்பு விவசாயத்துறைக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறிவருகின்றது.

இச்சவாலை எதிர்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

விவசாயப் பயிர்கள் வெட்டுக்கிளிகளின் தாக்கத்திற்கு உள்ளாவது அண்மைக்காலத்தில் விவசாயத்துறை எதிர்கொண்டிருக்கும் புதிய சவாலாக மாறியிருப்பதுடன், இது விவசாயிகளின் வருமானத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்நிலை தொடருமாக இருந்தால் ஏற்கனவே சுகாதார மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைக்கு முகங்கொடுத்திருக்கும் நாட்டின் விவசாயிகளின் வருமான மார்க்கம் மேலும் பாதிக்கப்படும்.

எனவே அத்தகைய சூழ்நிலையொன்று உருவாகாமல் தடுத்து நிறுத்துவதற்கான உரிய நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும் என்றும் அவர் தனது டுவிட்டர் பதிவில் வலியுறுத்தியுள்ளார். (ஜ-4)

## உடல் வெப்பநிலை பரிசோதிக்கும் கருவிகள் கையளிப்பு



(குப்பிழான்)

நெடுந்தீவுப் பிரதேச செயலகத்துக்கு, கனடா, நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் இரண்டு உடல் வெப்பநிலை பரிசோதிக்கும்கருவிகளை வழங்கியுள்ளது.

இதிலொரு கருவியை நெடுந்தீவுக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடமும் மற்றொன்றைப் பிரதேச செயலக சுகநல குழுவிடமும் பிரதேச செயலாளர்எவ். சி. சத்திய சோதி அண்மையில் கையளித்தார்.

மேற்படி கருவி தற்போதுள்ள கொவிட்-19 காலப்பகுதியில் மிகவும் முக்கியமானதாகவும், அவசியமானதாகவும் கருதப்படுகின்றது.

பிரதேச செயலகத்திற்கு சேவை பெற வரும் பொதுமக்களின் உடல் வெப்பத்தைக் கணிப்பிடுவதற்குப் பெரும் உதவியாகவும், பயனுள்ளதாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (2-5-18)

## தனிமைப்படுத்தலில் இருந்த 70 கடற்படையினர் வீடுகளுக்கு

(தருமபுரம்)

கிளிநொச்சி - இரணைமடு விமானப்படை முகாமில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து கொண்டு 70 கடற்படையினர் நேற்று வெளியேறினர்.

கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில், கடந்த 20 ஆம் திகதி, வெலிசர கடற்படை முகாமில் இருந்து தனிமைப்படுத்தலுக்காக 167 கடற்படையினர் இரணைமடு விமானப்படை முகாமுக்கு அழைத்துவரப்பட்டனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தலுக்காக அழைத்துச் வரப்பட்ட கடற்படையினருக்கு. பி.சி. ஆர்.பரிசோதனை செய்யப்பட்டபின் நோய்த் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் 70 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து நேற்று வெளியேறினார்களென இரணைமடு விமானப் படை கட்டளை அதிகாரி றொகான் பத்திரண தெரிவித்தார்.

மேலும் எஞ்சியுள்ள 97 கடற்படையினரின் இரத்த மாதிரிகள்,பி.சி.ஆர்.பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான் பரிசோதனை முடிவுகள் கிடைக்கப்பெற்று தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களும் தனிமைப்படுத்தலிலிருந்து வெளியேறுவர் என அவர் மேலும் தெரிவித்தார். (2-5-8-316-100)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவக ச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 160 | 200 |
| தக்காளி | 160 | 150 | 140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 110 | 120 | 80 |
| கோவா | 100 | 120 | 140 | 160 |
| கரட் | 120 | 170 | 200 | 200 |
| பூசணி | 50 | 40 | 40 | 50 |
| புடோல் | 80 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 80 |
| சின்ன வெங்காயம் | 220 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 60 | .120 |
| கருணைக் கிழங்கு | 150 | 140 | 120 | 100 |
| பயற்றங்காய் | 200 | 200 | 140 | 120 |
| லீக்ஸ் | 120 | 170 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | 150 | 120 | 160 |
| கறிமிளகாய் | 100 | 100 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 180 | 200 | 160 |
| போஞ்சி | 150 | 240 | 260 | 280 |
| கத்தரிதம்புள்ள | 160 | 160 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 50 | 40 |
| தேசிக்காய் | 350 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 50 | 40-60 |
| இராசவள்ளி | 250 | 100 | 250 | 240 |
| வெங்காயப்பூ | -- | 220 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 | 50 | 120 |

## அதிகரிக்கும் போதைப்பொருள் பாவனை தடுக்காவிடின் விளைவு பெரிதாகிவிடும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அண்மைக்காலமாகபோதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவதாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் சுட்டிக்காட்டினார். அண்மையில் நடைபெற்ற நகரசபை மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருள் பாவனையை கண்டும் காணாமலும் விட்டால் நாளடைவில் சமூகத்தில் அது பெரும் பிரச்சினையை ஏற்படுத்தும். இளைய தலைமுறை வழிதவறிச் செல்ல காரணமாக அமையும். போதைப்பொருள் பாவனை தொடர்பில் கவனம் செலுத்தி நகரை மீட்கவேண்டிய கடமை நகரசபைக்கு உள்ளது.

எனவே சாவகச்சேரி பகுதியில் இடம்பெறுகின்ற இவ்வாறான சட்டவிரோதச் செயற்பாடுகள் தொடர்பில் பொலிஸ் மற்றும் ஆளுநருடன் இணைந்து செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (2-5-30)

## ஒரு கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

தெமட்டகொடபகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஒரு கோடி ரூபாய் பெறுமதியான ஒரு கிலோகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. இச்சம்பவம் தொடர்பில் 56 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு வடக்குப் பிராந்தியத்திற்கான குற்றத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெமட்டகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-8)

# ஊரடங்குச் சட்டத்தை மீறிய 25 ஆயிரத்து 942 பேருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

கொவிட்- 19 வைரஸ் பரவலை தடுக்கும் நோக்கில் தனிமைப்படுத்தல் மற்றும் தொற்று நீக்கல் சட்டத்திற்கமைய அமுல்படுத்தப்பட்டு வரும் ஊரடங்குச் சட்டத்திற்கு புறம்பாக செயற்பட்டதாக இதுவரையில் 25 ஆயிரத்து 942 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன், இவர்களுள் 10 ஆயிரத்து 892 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி மாலை 6 மணிமுதல் நாடளாவிய ரீதியில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு வந்ததுடன், கடந்த மே மாதம் 11 ஆம் திகதி முதல் ஊரடங்கு தளர்த்தப்பட்டு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு மாத்திரம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் ஊரடங்குச் சட்டத்தை மீறியதாக இதுவரையில் 70 ஆயிரத்து 272 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர்களிடமிருந்து 19 ஆயிரத்து 952 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (ஜ-8)

# அதிகரித்துவரும் மின்சார பாவனை

(கொழும்பு)

நாளாந்த மின்நுகர்வு அதிகரித்துள்ளதாக மின்சக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக மூடப்பட்டிருந்த தொழிற்சாலைகள் தற்போது மீளத் திறக்கப்பட்டு இயங்க ஆரம்பித்துள்ளதால் மின்சார நுகர்வு அதிகரித்துள்ளதாக மின்சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுரக்சன ஜயவர்த்தன நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

தற்போது நாளொன்றுக்கு 43 மெகா வோள்ட் மின்சாரம் தேவைப்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (ஜ-8)

# ஓவியம் வரைந்தவர்கள் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல்

(கொழும்பு)

மினுவாங்கொடை பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு மூன்று பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் பாடசாலை சுவரொன்றில் ஓவியம் வரைந்து கொண்டிருந்த பழைய மாணவர்களை கார் மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர்.

வேகத்தை குறைத்து செல்லுமாறு, குறித்த மாணவர்களால் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களுக்கு கூறப்பட்டதையடுத்தே, இந்த தாக்குதல் சம்பவம் இடம் பெற்றதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மினுவாங்கொடை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-8)

# பதவி வெற்றிடம்

- கணக்காளர் (பெண்)
- அலுவலகச் செய்தியாளர்கள் வெளிக்களம் (ஆண்கள்)
- அலுவலகச் செய்தியாளர்கள் உள்ளகம் (பெண்கள்)
- விளம்பர வடிவமைப்பாளர்கள் (இருபாலாரும்)

## தகைமை

க.பொ.த. உயர்தரம், 25 வயதைப் பூர்த்தி செய்திருத்தல்.

தகைமையும் விருப்பமும் உடையவர்கள் 12.06.2020 க்கு முன் கிடைக்கக் கூடியவாறு தங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

இல. 3,2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்
வலம்புரி

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு : 1983 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 1
கி.பா : 36 3/4 செவ் 7 இல்
உயரம் : 5'5"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. நீதிமன்றம், புத்தகம் கட்டுநர்
எதிர்பார்ப்பு : படித்த பெண்
தொ.இ: B/9997

பிறப்பு : 1972 இந்து
நட்சத்திரம் : அச்சுவினி
கி.பா : 16 1/2 செவ் 8 இல்
உயரம் : 154 cm
தகைமை/தொழில்: கலைமாணி, பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச தொழில்
தொ.இ: B/7115

பிறப்பு : 1986 இந்து
நட்சத்திரம் : மிருகசீரிடம்
கி.பா : செவ் 4 இல்
உயரம் : 6"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. பிரான்ஸில் வேலை செய்கின்றார்
எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண்
தொ.இ: B/7122

பிறப்பு : 1986 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 4
கி.பா : செவ் 3 இல்
உயரம் : 5'7"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. பிரான்ஸில் வேலை செய்கின்றார்.
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்.
தொ.இ: B/7129

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு : 1992 இந்து
நட்சத்திரம் : அவிட்டம் 3
கி.பா : 13 செவ் 2 இல்
உயரம் : 153 cm
தகைமை/தொழில்: B.E
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகம்
தொ.இ: G/9462

பிறப்பு : 1984 இந்து
நட்சத்திரம் : மிருகசீரிடம் 4
கி.பா : 68 3/4 செவ் 7 இல்
உயரம் : 5'5"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.
எதிர்பார்ப்பு: சாதாரண அரச, தனியார் உத்தியோகம் பார்க்கும் மணமகன்
தொ.இ: G/8064

பிறப்பு : 1984 இந்து
நட்சத்திரம் : உத்தரம் 4
கி.பா : 7 செவ் 5 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: G/8072

பிறப்பு : 1993 இந்து
நட்சத்திரம் : கார்த்திகை 1
கி.பா : 20 செவ் 12 இல்
உயரம் : 5'2"
தகைமை/தொழில்: HND IT, BIT
எதிர்பார்ப்பு: பட்டதாரி, பொறியியலாளர், கணக்காளர், வங்கி உத்தியோகத்தர், விரிவுரையாளர்
தொ.இ: G/8079

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# 79வது பிறந்த நாள் வாழ்த்து

07.06.2020





திரு.நடராசா
சிவசுப்பிரமணியம்
(செட்டியார்)
(திருமுருகன் மண்டபம்,நீர்வேலி – உரிமையாளர்)

தேசிய சேவை மேன்மை ஆசிரியர் விருது, கலாபூஷ்ணம் விருது, ஜனாதிபதி விருது 2017,18,19,முதலமைச்சர் விருது,செம்புல குருசில் விருது, சிறந்த சமூக சேவையாளர் விருது, சைவப்புரவலர்,சமூக ஜோதி,எழுத்தாளர் நீரூர் முருகதாசன்,திருமுருகன், திரு.நடராசா சிவசுப்பிரமணியம் அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

(2131)




வாழ்த்துவோர்:
மக்கள்,மருமக்கள்,பெறாமக்கள்,பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்,நண்பர்கள்.

# இலங்கையில் பாலைவன வெட்டுக்கிளிகளா? குழப்பங்களும் விளக்கங்களும்



கலாநிதி.கந்தையா பகீரதன்
தலைவர்,
விவசாய உயிரியல் துறை
விவசாய பீடம், யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

கடந்த நான்கு மாதங்களாக இலங்கையை உலுக்கி எடுத்து விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலில் பாரிய நெருக்கடிகளையும் பின்னடைவுகளையும் ஏற்படுத்திய கொரோனாவின் (COVID 19) பீதியும் தாக்கமும் சற்றுக் குறைவடைகின்ற வேளையில் பாலைவன வெட்டுக்கிளிகள் இலங்கைக்கு வந்து பாரிய தாக்கத்தை விளைவித்து உணவுப் பஞ்சத்தையும் பட்டினியையும் ஏற்படுத்துமா? என்ற குழப்பத்தில் மக்களும், விவசாயப் பெருமக்களும், விவசாயத்துறை சார்ந்தவர்களும் இருக்கின்ற வேளையில், இக்கட்டுரையானது பாலைவன வெட்டுக்கிளிகள் பற்றிய விளக்கத்தை அளிப்பதற்காக அமைந்துள்ளது.

### பாலைவன வெட்டுக்கிளிகள் என்றால் என்ன?

பாலைவன வெட்டுக்கிளிகள்[Desert locust (Schistocerca gregari)], சிறிய உணர்கொம்புகளை கொண்ட வெட்டுக்கிளிக் குடும்ப (Family: Acrididae) அங்கத்தவர்கள். ஆனால் பாலைவன வெட்டுக்கிளி இனம் மற்றைய வெட்டுக்கிளி குடும்ப அங்கத்தவர்களுடன் வேறுபடுவதற்குக் காரணம், பாலைவன வெட்டுக்கிளிகள் தமது நிறம், நடத்தை, உருவம் என்பவற்றைத் தமது எண்ணிக்கை மற்றும் காலநிலை மாறும்போது மாற்றக் கூடியவை. அதாவது, இவற்றின் எண்ணிக்கை குறைவாக இருக்கும்போது இவை தனியாகவும் (Solitary), இளம் கரும் பச்சை நிறத்திலும் எண்ணிக்கை அதிகரிக்கின்ற போது கபிலநிறமாக மாறுவதோடு மட்டுமல்லாது, கூட்டமாகவோ (Gregariously) [அடர்த்தியான நிறையுடலி திரள் (Swarm of Adult) அல்லது அணுங்குப் படை (Hopper Band)]ஆக இவை மாறி பறந்தோ அல்லது நடந்தோ இடம் விட்டு இடம் பெயரும் திறன் கொண்டவை. இந்த நடத்தை, உடலியல் மற்றும் உருவ மாற்றத்தை நாம் மற்றைய வெட்டுக்கிளிகளிடம் அவதானிக்க முடியாது. பாலைவன வெட்டுக்கிளிகள் பெரும்பாலும் ஆபிரிக்க, அரேபிய, மேற்கு மற்றும் தென் ஆசியாவின் வறண்ட சில பிரதேசங்களில் அதிகம் வாழ்வதனாலும், வெப்பமான மற்றும் மிகக் குறைந்த மழைவீழ்ச்சி கிடைக்கும் இடங்களிலும் வாழ்ந்து, மழைவீழ்ச்சி கிடைக்கும் போது இனத்தை பெருக்குவதனாலும், காலத்துக்குக்காலம் கூட்டம் கூட்டமாக குடிபெயர்வதனாலும் இப்பெயர் கொண்டு இவை அழைக்கப்படுகின்றன.

### ஏன் பாலைவன வெட்டுக்கிளிகள் மிகவும் ஆபத்தானவை?

பாலைவன வெட்டுக்கிளிகள் தனித்து இருக்கும் போது ஆபத்து மிகவும் குறைவு. ஆனால் இவை கூட்டமாகச் சேரும்போது அவற்றின் குணத்தை மாற்றிக்கொண்டு நீண்ட இறகு முளைத்த பெரும்பசி கொண்ட பறந்து செல்லும் வேட்டை விலங்குப் படையாக மாறி குடிபெயர்ந்து செல்லும் இடமெல்லாம் பேரழிவை ஏற்படுத்தி தனது இனத்தைப் பெருக்கி உணவுதேடிச் சென்று கொண்டே இருக்கும். ஒரு சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் பரந்து இருக்கும் ஒரு பாலைவன வெட்டுக்கிளிக் கூட்டத்தில் கிட்டத்தட்ட 150- 10.000 மில்லியன் வெட்டுக்கிளிகள் வரை இருக்கும். இவை குடிபெயரும் காலங்களில் இவ்வாறு பல கூட்டங்கள் வருகை தருவதோடு மட்டுமல்லாது இவை ஊடுருவும் இடங்களில் இருக்கும் எல்லாவிதமான தாவரங்களினதும் மற்றும் பயிர்களினதும் அனைத்துப் பசுமையான பகுதிகளையும் அசுர வேகத்தில் உண்டு ஏப்பமிட்டு தொடர்ச்சியாக ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 150-400 கிலோ மீற்றர் தூரம் காற்றின் உதவியுடன் பயணம் செய்யும். ஒரு வெட்டுக்கிளியால் தனது எடைக்கு சமனான உணவை ஒரு நாளைக்கு உண்ணமுடியும். ஒரு பாலைவன வெட்டுக்கிளிப்படை ஒரு சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் பரந்து இருக்கும் போது ஒரு நாளைக்கு 35,000 மனிதர்கள் சாப்பிடும் உணவுக்கு சமனான 'எடையுள்ள பயிர்களை தின்று அழித்துவிடும். அது மட்டுமன்றி இவற்றால் மூன்று மாதங்களில் 20 மடங்காகவும், ஆறு மாதங்களில் 400 மடங்காகவும்,ஒன்பது மாதங்களில் 8000 மடங்காகவும் பெருகும் ஆற்றல் இப்படைக்கு உண்டு. இதனால்தான் இதன் வருகையை கேட்டு உலகமே கலக்கத்தில் இருக்கிறது. இதனால் ஏற்படப்போகும் பயிர்ச் சேதத்தினால் உலகத்தில் உள்ள பத்தில் ஒரு பகுதி மக்களுக்கு உணவு கிடைக்காமல் போகும்.



### பாலைவன வெட்டுக்கிளிகளின் வாழ்க்கை வட்டம்

பாலைவன வெட்டுக்கிளிகளின் வாழ்க்கை வட்டம் மூன்று பிரதான அவத்தைகளைக் கொண்டது. முட்டை, அணுங்கு I,II,III and IV, நிறையுடலி. ஆண் மற்றும் பெண் இனச்சேர்க்கையின் பின்னர், பெண் வெட்டுக்கிளியானது சொகுசான மற்றும் ஈரப்பதன் கலந்த மண்ணில் தனது வயிற்றின் பின்புறமாக உள்ள கூரான பகுதியினால் 10-15 cm ஆழத்திற்கு மண்ணைக் கிண்டி 3-4 cm நீளமான 80-160 முட்டைகளைக் கொண்ட முட்டைக் குடுவையை உருவாக்கும். முட்டையில் இருந்து வெளிவரும் அணுங்குகள் நான்கு அவத்தைகளின் ஊடாக உருமாறி நிறையுடலி வெட்டுக்கிளியாக மாறும் வாழ்க்கை வட்டத்தை பூர்த்தி செய்யும் காலம் தட்ப வெப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப 40 நாட்கள் தொடக்கம் 6 மாதங்கள் வரை வேறுபடும். ஆண் மற்றும் பெண் வெட்டுக்கிளிகளை அவற்றின் உருவவியலின் அடிப்படையில் வேறுபடுத்தலாம்.

### பாலைவன வெட்டுக்கிளிகளின் பரம்பல்

பாலைவன வெட்டுக்கிளிகள் பொதுவாக ஆபிரிக்கா காடுகளில் மற்றும் அரேபிய பாலைவனங்களில் அதிகமாக வாழ்கின்றன. தொடர்ச்சியான வறட்சியின் பின்னர் அரேபிய பாலைவனங்களில் 2018 மே- ஓகஸ்டில் பல சூறாவளிகள் ஏற்படுத்திய தொடர் மழையினால் பசுமையான பாலைவனத்தில் மூன்று தடவைகள் முழுமையாக இனம் பெருகிய பாலைவன வெட்டுக்கிளிகளை யாரும் கண்டு கொள்ளாததனால், உணவு தேடி கிழக்காபிரிக்க நாடான ஏமனுக்கும் மற்றும் ஈரானுக்கும் 2019 தை மாதத்தில் சென்றடைந்தது. பின்னர் ஏமனில் இருந்து சோமாலியாவிற்கு பரவி பல கூட்டங்களாக அண்டை நாடுகளான கென்யா, உகண்டா, எதியோப்பியா மற்றும் சூடான் ஆகிய நாடுகளுக்கு பரவியது. பின்னர் செங்கடலை இடைவிடாமல் கடந்து அரேபிய தீபகற்பத்தின் ஊடாக ஆசியாக் கண்டத்தின் ஈரானுக்குள் நுழைந்தன. இவ்வாறு இவை பல்கிப் பெருகுவதற்கு முக்கிய காரணம் மோசமான காலநிலை மாற்றம். பின்னர் ஈரான் ஊடாக இந்திய மற்றும் பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் உள்ள பஞ்சாப் மாநிலத்தில் குடிகொண்டு அங்கே பல மில்லியன் ரூபா பெறுமதியான பயிரிழப்பை ஏற்படுத்தியும் தன் இனத்தை பெருக்கியும் இந்தியாவின் வட மாநிலங்களான ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், அரியானா மற்றும் குஜராத்திலும் தற்போது தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. இதற்குக் காரணம் வட மாநிலங்களில் இப்போது பருவமழை ஆரம்பித்ததே.

### பாலைவன வெட்டுக்கிளிகள் இலங்கைக்கு வருமா அல்லது இப்போது தாக்கும் வெட்டுக்கிளிகள் என்ன?

இனி வரும் வாரங்களில் நிகழ இருக்கும் பருவமழை மாற்றத்தினால் தற்போது ஆபிரிக்காவில் உள்ள வெட்டுக்கிளிகள் மேற்கு ஆபிரிக்காவை நோக்கியும், ஆசியாவில் உள்ளவை மீண்டும் இந்தியாவின் வடமாநிலமான ராஜஸ்தான் ஊடாக அரேபிய பாலைவனங்களை அல்லது ஆபிரிக்காவை சென்றடைலாம் எனவும் ஐ.நாவுக்கான சர்வதேச உணவு மற்றும் விவசாயத்துக்கான் நிறுவனத்தின் பாலைவன வெட்டுக்கிளி முன் அறிவித்தல் நிறுவகம் தெரிவித்துள்ளது. இதுவரை இந்தியாவின் எந்தவொரு தென் மாநிலங்களுக்கோ அண்டைய நாடுகளான பங்களாதேஷ், நேபாளம் மற்றும் இலங்கைக்கு அபாய எச்சரிக்கையை இந்த முன்னறிவித்தல் நிலையம் விடுக்கவில்லை.

இதனால் இலங்கைக்கு இதன் தாக்கம் மிகவும் குறைவு அல்லது இல்லை என்றே சொல்லலாம். இருந்தாலும் அனுமானிக்க முடியாத காலநிலை மாற்றங்கள் பாலைவன வெட்டுக்கிளிகளை தங்கள் தோட்டங்களில் தற்போது பெருகி இருக்கும் தோட்ட வெட்டுக்கிளி இனங்களை பாலைவன வெட்டுக்கிளிகளாக கருதி விவசாயத்துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவித்தவண்ணம் இருக்கின்றார்கள். இப்போது தாக்கத்தை ஏற்படுத்துபவை தோட்டவெட்டுக்கிளி வகை. கத்திரி வெயிலின் பின்னர் பெய்த மழையின் காரணமாக, தோட்ட வெட்டுக்கிளிகள் சற்று பெருகியுள்ளன. இவை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தாது. இருந்தாலும், விவசாயிகள் விவசாய திணைக்களம் வழங்கியுள்ள தொலைபேசி எண் 1920அல்லது விவசாய உயிரியல் துறை, விவசாய பீடம், அறிவியல் நகர், கிளிநொச்சி (தொலைபேசி எண் 0212060171) தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களையும் உதவிகளையும் பெறலாம்.

2020ஆம் ஆண்டின் படையெடுப்பு கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத மிக மோசமான அழிவுகளை ஏற்படுத்தப் போவதாக ஐ.நாவுக்கான சர்வதேச உணவு மற்றும் விவசாயத்துக்கான நிறுவனம் எச்சரித்துள்ளது.

உலக வங்கியின் கருத்துப்படி தற்பொழுது ஆபிரிக்காவில் மட்டும் 90 மில்லியன் ஹெக்டேயர் பயிர் நிலங்கள் வெட்டுக்கிளி தாக்குதலுக்கு உள்ளாகும் நிலையில் உள்ளதாகவும், அப்பயிர் நிலங்கள் அழிக்கப்பட்டால் அடுத்த ஆண்டில் 9 பில்லியன் டொலர் வரை இழப்பு ஏற்படும் எனவும் முன்னறிவிப்பு விடுத்துள்ளது.

### பாலைவன வெட்டுக்கிளிகளை கட்டுப்படுத்துவது சாத்தியமா!!!

பாலைவன வெட்டுக்கிளிகள் கோடி கோடி ஆக வருவதோடு மட்டுமல்லாமல் பரந்துபட்டு அனைத்துப் பயிர் மற்றும் தாவரங்களையும் தாக்குவதால் இவற்றைக் கட்டுப்படுத்துவது மிகவும் சிரமம். இதற்காகத்தான் 1920ஆம் ஆண்டில் இருந்தே "வெட்டுக்கிளி முன் எச்சரிப்பு" தந்திரோபாய முறையில் வருமுன் காப்போம் உத்தியை பாதிக்கப்பட்ட நாடுகளால் பின்பற்றப்படுகின்றன. இந்த உத்திகளின் அடிப்படையில் ஐ.நாவுக்கான சர்வதேச உணவு மற்றும் விவசாயத்துக்கான் நிறுவனம் பாலைவன வெட்டுக்கிளிகள் தகவல் சேவையை {Desert Locust Information Service (DLIS)} வெட்டுக்கிளி அவதானிப்பு (Locust Watch) இணையத்தளத்தின் ஊடாக வழங்குவதோடு மட்டுமல்லாது வெட்டுக்கிளிகளின் நடமாட்டம், அவை எந்த நாடுகளை நோக்கி செல்லப் போகின்றன போன்ற செயற்கைக் கோள் (Satellite images) மூலம் பெறப்பட்ட துல்லியமான தகவல்களை முன்கூட்டியே அந்த நாடுகளுக்கு அறிவிப்பதால் அந்த நாடுகள் இவ்வெட்டுக்கிளிகளை கட்டுப்படுத்தத் தயார் நிலையில் இருக்கும். வெட்டுக்கிளிப்படை வரும் சந்தர்ப்பத்தில் விமானம் மூலமும் தீயணைப்பு உபகரணங்கள் மூலமும் பூச்சி நாசினிகளை விசிறி கட்டுப்படுத்துகின்றன.

பாலைவன வெட்டுக்கிளிகள் மிகவும் உறுதியான உடலமைப்பைக் கொண்டிருப்பதால் இவற்றைக் கொல்வதற்கு organo phosphate வகையைச் சேர்ந்த டியாசி நோன் (Diazinon), மலத்தியோன் (Malathion), பனிற்றோதியோன் (Fenitrothion), குலோரிப்யரிபோஸ் (chlorpyrifos) போன்ற தடை செய்யப்பட்ட பூச்சி நாசினிகளே பயன்படுத்தப்படக் கூடியவை. இந்தப் பூச்சி நாசினிகள் இயற்கைக்கும் மற்ற உயிரினங்களுக்கும் மிகவும்கேடு விளைவிப்பவை. ஆனாலும் சில மிகவும் இக்கட்டான சூழ் நிலைகளில் மாத்திரம் தேவையான அளவில் பயன்படுத்த அனுமதி வழங்கப்படலாம்.

பூச்சி நாசினிகள் தவிர உரத்த ஒலி எழுப்புதல் மூலம் இவற்றை விரட்டி அடிக்கலாம் என்றும் பலவிதமான உயிரியல் கட்டுப்பாடு முறைகள் மூலம் இவற்றை கட்டுப்படுத்தலாம் என்றும் பல ஆய்வுகள் இருந்தாலும், வெட்டுக்கிளிகள் பெருகும் இடங்களில் அவற்றின் முட்டைகளை மற்றும் இறகு முளைக்காத அணுங்குகளை நவீன தொழில் நுட்பங்கள் (satellite or drone camera watch) இனங் கண்டு முற்றாக அழித்தல் மாத்திரமே பட்டினியில் இருந்து நாம் பாதுகாப்பாக இருக்கலாம் இதில் எந்த ஐயமும் இல்லை.

ஒரு புது முயற்சியாக சீனா ஒரு இலட்சம் தாராக்களை பாகிஸ்தான்-இந்தியா எல்லைக்கு அனுப்பி வெட்டுக்கிளிகளின் முட்டைகளை மற்றும் இறகு முளைக்காத அணுங்குகளை தாராக்களுக்கு இரையாக்கி கட்டுப்படுத்த முயல்கின்றது. வெற்றி கிடைக்குமா? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.




# சுதேசி சிந்தனை

ஒருசமயம் மகாத்மாகாந்தி காசிக்குச் சென்றிருந்தார்.

அங்கே அவர் மதன்மோகன் மாளவியாவைச் சந்தித்து ''இங்கிலாந்து ராணியிடமிருந்து எனக்கு அழைப்பு வந்திருக்கிறது. வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ளும்படி என்னைக் கூப்பிட்டிருக்கிறார்கள்.

ஆனால்அதில்கலந்துகொள்வதற்குச் சில நிபந்தனைகள் விதித்திருக்கிறார்கள். அதாவது ராணியார்ரைப் பார்க்க வருகிறவர்கள் பாண்ட், கோட்டு, சூட்டு, டை, தொப்பி, ஷு எல்லாம் போட்டுக் கொண்டுதான் வரவேண்டும்... ஆங்கிலத்தில் தான் பேசவேண்டும்... இது தான் நிபந்தனை!''

"இந்த நிபந்தனையை நான் ஏற்க முடியாது...அதனால் இங்கிலாந்து ராணியின் அழைப்பை நிராகரிப்பது என்று நான் முடிவு செய்திருக்கிறேன்'' என்று கூறினார்.

அதைக் கேட்டதும் மாளவியா சொன்னார்...

''எனக்கும்கூட இங்கிலாந்து ராணியிடமிருந்து அப்படி ஓர் அழைப்பு வந்திருக்கிறது. நான் அதில் கலந்துகொள்வதாகச் சொல்லி பதில் எழுதியிருக்கிறேன்!'' என்றார்.

மதன்மோகன் மாளவியா இப்படிச் சொன்னதைக் கேட்டதும் காந்திஜி மிகவும் ஆச்சரியப்பட்டார்.

ஏனென்றால் மாளவியா காந்திஜியை விட தீவிரமான சுதேசி சிந்தனை உள்ளவர்.

"இவர் காசியில் ஹிந்து பல்கலைக்கழகத்தை உருவாக்கி நம்முடைய இந்திய கலாசாரம் பற்றியெல்லாம் போதித்துக் கொண்டிருக்கிறார்.

அப்படிப்பட்டவர் எப்படி இங்கிலாந்து ராணியின் அழைப்பை ஏற்றுக்கொண்டார்?'' இப்படி காந்திஜி யோசித்துக் கொண்டிருந்தபோதே மாளவியா தான் அனுப்பியிருந்த பதில் கடிதத்தின் நகலை காந்திஜியிடம் கொடுத்து ''இதைப் படித்துப் பாருங்கள்'' என்றார்.

காந்திஜி அந்தக் கடிதத்தை வாங்கிப் படித்தார். அதில் என்ன எழுதியிருந்தது தெரியுமா?

''நான் தங்களின் அழைப்பை ஏற்று வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்கிறேன். ஆனால் நான் இந்தியாவில் பிறந்து வளர்ந்ததால் எனக்குப் பழக்கமான உடை அணிந்து தான் வருவேன். ஏனென்றால் நான் இந்த நாட்டின் பிரதிநிதியாகத்தான் அந்த மாநாட்டில் கலந்துகொள்கிறேன். அதனால் என்நாட்டு உடையில்தான் நான் வரவேண்டியிருக்கிறது''

"ராணியார் பல மொழிபெயர்ப்பாளர்களை அமர்த்திக் கொள்ளும் வசதி படைத்தவர். அதனால் என் நாட்டு மக்கள் சார்பாக நான் பேசும் மொழியை மொழிபெயர்க்க நீங்கள் ஏற்பாடு செய்ய முடியும்!

''ராணியாரின் மாளிகையில் என்னுடைய சௌகரியத்திற்கு வேண்டிய வசதிகளைச் செய்வது மிகவும் சுலபம் என்று நினைக்கிறேன். நான் தினமும் கங்கை நீரில்தான் குளிக்கிறேன்... கங்கை நீரைத்தான் குடிக்கிறேன். அதனால் ராணியாரின் விருந்தினராக நான் அங்கு இருக்கும் வரையில் எனக்கு இந்த வசதிகளை ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும்!'' என்று இங்கிலாந்து ராணிக்கு மாளவியா கடிதம் எழுதியிருந்தார்.

வட்ட மேசை மாநாடு நடந்தது. அதில் காந்திஜியும், மாளவியாவும் சுதேசி உடையிலேயே கலந்து கொண்டார்கள்! அது மட்டுமல்ல,


வட்ட மேசை மாநாடு நடந்த அந்த ஏழு நாட்களும் அவர்கள் விரும்பியபடியே இந்தியாவிலிருந்து கங்கை நீரை எடுத்துக் கொண்டு போய் கொடுப்பதற்கும் இங்கிலாந்து ராணி ஏற்பாடு செய்திருந்தார்களாம்!

சுதேசிக் கொள்கையில் காந்திஜியும் மாளவியாவும் எவ்வளவு உறுதியாக இருந்திருக்கிறார்கள் என்று பாருங்கள்!



உருவில் உள்ள 4 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்

## வரைந்து பழகுவோம்






பெரிய நகரங்களிலே போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்கப் பின் பற்றப்படும் நவீன வீதி அமைப்புக்கள்,
"மேம்பாலங்கள்,
சுராங்க வழிப்பாதை"



# ஆயுதங்களால் அனைத்தும் முடியும் என்ற அடிப்படைவாதம் பிரச்சினைகளைத் தீர்க்காது

## ரவி சுட்டிக்காட்டு

**(கொழும்பு) போரை நிறைவுக்குக் கொண்டுவந்தது போன்று துப்பாக்கி மூலம் அனைத்தையும் நிறைவுக்குக் கொண்டுவர முடியும் என்ற அடிப்படைவாதத்திலிருந்து செயற்பட ஆரம்பித்தால் பிரச்சினைகள் தீரப் போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவி கருணாநாயக்க சுட்டிக்காட்டினார்.**

கொழும்பு ஊடகமொன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேசிய வீரர்கள் தினத்தில் ஆற்றிய உரையின்போது "சர்வதேச அழுத்தங்கள் தொடர்ந்தால் சர்வதேச அமைப்புகளிலிருந்து வெளியேற தயங்கப்போவதில்லை" என்று கூறியமையை எவ்வாறு பார்க்கின்றீர்கள் என்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டினுள் நடைபெற்ற விடயங்கள் தொடர்பில் அழுத்தங்களை அளித்தால் அவற்றுக்கான தீர்வுகளைக் காண முயல வேண்டும். அவற்றை மறைப்பதால் பயனில்லை. நடைபெறாத விடயங்களை கூறினால் ஜனாதிபதி கூறும் நிலைப்பாட்டில் இருப்பதில் தவறில்லை.



உதாரணமாக, சர்வதேச நாணய நிதியம் நிதியுதவி அளிக்க வேண்டுமாயின் நிபந்தனைகளை விதித்து அவற்றை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று கோரினால் அது தவறாகவே அமையும்.

அதேநேரம் நாட்டின் முன்னேற்றத்திற்கான நிபந்தனைகளாக இருந்தால் அவற்றை புறக்கணிக்கவும் முடியாது. ஆகவே இந்த இரண்டு நிலைப்பாட்டுக்கும் மத்தியில் தான் தீர்மானங்கள் உள்ளன.

இலங்கையை சர்வதேச குற்றவாளிக்கூண்டில் நிறுத்துவதாக கூறப்பட்டபோதும் கடந்த ஐந்து வருடங்களில் எதுவுமே நடைபெறவில்லை. சர்வதேசத்துடன் இணைந்தே பயணிக்க வேண்டும். தனித்து செயற்படுவதால் எதனையும் செய்ய முடியாது.

போரை நிறைவுக்கு கொண்டு வந்தது போன்று துப்பாக்கி மூலம் அனைத்தையும் நிறைவுக்கு கொண்டுவர முடியும் என்ற அடிப்படைவாதத்திலிருந்து செயற்பட ஆரம்பித்தால் பிரச்சினைகள் தீரப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# சீனாவிலிருந்து மர்மப்பொதி

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பெயரினை பயன்படுத்தி சீனாவில் இருந்து இலங்கை விமான சேவையினூடாக பொதியொன்றை கொண்டு வந்த இராணுவப் பாதுகாப்பு அதிகாரியொருவர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் விசேட பணிப்பின் பேரிலேயே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சீனாவின் ஷங்காய் விமான நிலையத்திலிருந்து ஜனாதிபதிக்கு பொதியொன்றை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவையுள்ளதாக குறித்த நபர் இலங்கை விமான சேவைக்கு அறிவித்துள்ள நிலையில் ஷங்காய் விமான நிலையத்தில் இலங்கை விமான சேவை ஊழியர்களிடம் கையளிக்கப்பட்ட பொதியினை அவர்கள் இலங்கையின் விமான நிலையத்தில் உள்ள அதிகாரிகளிடம் கையளித்துள்ளனர். (ஐ-8)

# விபத்தில் காயமடைந்த சிறுவன் 4 நாட்களின் பின் மரணம்!


(ஏறாவூர்)

மட்டக்களப்பில் விபத்து ஒன்றில் காயமடைந்த சிறுவன் 4 நாட்களின் பின்னர், உயிரிழந்துள்ளார். மட்டக்களப்பு - கல்லடியில் கடந்த மாதம் 30 ஆம் திகதி இடம் பெற்ற விபத்தில், கல்லடியை சேர்ந்த ஒருவரும் அவரின் 5 வயது மகனும் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சையளிக்கப்பட்டு மறுதினமே வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, நேற்று முன்தினம் சிறுவன் மீண்டும் சுகயீனமுற்ற நிலை யில், மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள துடன், சீ.ரீ.ஸ்கான் எடுப்பதற்காக அம்பாறை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில், அங்கு சிறுவன் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு போதனா வைத் திய சாலையின் கவனயீனமே சிறுவனின் உயிரிழப்பிற்கு காரணமென சிறுவனின் தாய் குற்றம்சாட்டியுள்ளார். மூளை யில் இரத்தக்கசிவு ஏற்பட்டதால் சிறுவன் உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். (ஜ-4)

# மின்னொளி பூஜை ஜனாதிபதி தலைமையில்



(கொழும்பு)

மாபெரும் தேசிய பொசன் நிகழ்வுடன் இணைந்ததாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மிகிந்தலை மின்னொளி பூஜையின் இரண்டாவது நாள் நிகழ்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மூன்று நிகாயக்களினதும் மகாநாயக்க தேரர்கள் மற்றும் அனுநாயக தேரர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி புனித தந்தத்தை வழிபட்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார். (ஜ-4)

## பேருந்து நிலையம் கையளிப்பு

(மன்னார்)

மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலைய கட்டடம் நகர அபிவிருத்தி அதிகார சபையால் இன்று 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வமாக மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்படும் என மன்னார் நகர சபை உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ் தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் சுமார் 130 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மன்னார் பஸார் பகுதியில் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்படும். (2-5-285)

## இந்தியாவிலிருந்து இருவரை அழைத்துவந்த அறுவர் கைது

(மன்னார்)

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக படகு மூலம் தலைமன்னாரிற்கு இரண்டு பேர் வந்த நிலையில் அவர்களை அழைத்துவந்த மற்றும் அவர்களுக்கு உதவினார்கள் என்ற சந்தேகத்தில் 6 பேரை புலனாய்வுத்துறையினர் கைது செய்தனர்.

சட்டவிரோதமாக வந்த இருவரும் மடு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததையடுத்து அவர்கள் மட்டக்களப்பு புணானை தனிமைப்படுத்தும் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், படகு மூலம் அழைத்து வர உதவிகளை மேற்கொண்டவர்கள் என்ற அடிப்படையில் பேசாலை மற்றும் வங்காலை பகுதிகளைச் சேர்ந்த 6 பேரையும் இராணுவத்தின் உதவியுடன் நேற்று முன்தினம் புலனாய்வுத்துறையினர் கைது செய்துள்ளனர்.

இதன்போது குறித்த இருவரையும் அழைத்து வர பயன்படுத்தப்பட்ட படகு மற்றும் படகின் வெளி இணைப்பு இயந்திரம் போன்றவற்றை பொலிஸார் துள்ளுக் குடியிருப்பு கடற்கரையில் இருந்து மீட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-285)

## குணமடைந்தோர் 891

(கொழும்பு)

நாட்டில் நேற்றைய தினம் மேலும் 33 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. அதன்படி இலங்கையில் இதுவரை 891 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் ஆயிரத்து 801 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 899 பேர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைபெற்று வருகின்றனர்.

அத்துடன் 46 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் உள்ளனர். இந்நிலையில் இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## 453 கடற்படையினர் இதுவரை குணமடைவு

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்த கடற்படையினரில் மேலும் 10 பேர் முற்றாகக் குணமடைந்துள்ளனர்.

இதுவரை 453 கடற்படையினர் முற்றாகக் குணமடைந்துள்ளதாக கடற்படை ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

வெலிசர கடற்படை முகாமில் பணியில் இருந்த ஒருவருக்கு கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் கொரோனாத் தொற்று ஏற்பட்டதையடுத்தே கடற்படையினர் மத்தியில் தொற்று பரவி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வவுனியா மதவு வைத்த குளம் பகுதியில் அமைக்கப்பட்ட விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கன்றுகள் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டச் செயலகத்தின் ஒழுங்கமைப்பில் இடம் பெற்ற இந் நிகழ்வில் வவுனியா அரசாங்க அதிபர் எஸ்.எம்.சமன் பந்துலசேன, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், உதவி அரசாங்க அதிபர் கே.சபர்யா, பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மு.மகேந்திரன், வவுனியா வர்த்தக சங்க செயலாளர் ஆ.அம்பிகைபாலன் மற்றும் வனப்பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள், சிவில் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள், எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படம்-குருமன்காடு செய்தியாளர்)


## இணைய தாக்குதல் நிலைமை பற்றி ஸ்ரீலங்கா ரெலிகொம் விளக்கம்

விளம்பர விபரணம்

SLT யின் உள்ளக சேவைகள் மீது முயற்சிக்கப்பட்ட இணைய தாக்குதல் சம்பந்தமாக, SLT தனது சகல வாடிக்கையாளர்களுக்கும் தற்போதைய நிலைமை பற்றி விளக்கமளிக்க விரும்புகிறது. எமது உள்ளக தகவல் தொழில்நுட்ப முறைமைகளின் ஒரு பகுதியை மாத்திரம் தாக்கிய இணைய தாக்குதல் சம்பந்தமான முயற்சியை SLT முறிய டித்துள்ளது.

எமது விழிப்புணர்வுடன் கூடிய முன்னெச்சரிக்கை முறைமைகளே இந்த முயற்சியைக் கண்டுபிடிக்கக் காரணமாகும். சில செயலி சேவை வழங்கல்களின் செயற்பாட்டை இடைநிறுத்தி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட்டன. இந்தச் செயலி சேவை வழங்குதல்கள் தனிமைப்படுத்தப்பட்டு உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டன. SLT சேவைகளை வழங்குவதற்காக பயன்படுத்தப்படும் எந்த முறைமையிலும் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை. இவ்வகையில் எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் எந்தச் சேவைகளிலும் இடையூறுகள் எதுவும் ஏற்படவில்லை. அத்துடன், வாடிக்கையாளர்களின் தகவல்கள் தொடர்பாகவும் எவ்வித ஆபத்துக்களும் கிடையாது. இந்த விடயத்தில் முறைமை வல்லுநர்கள் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகின்றனர். அவர்கள், அனைத்து குறைகளையும் ஏற்கனவே கண்டறிந்துள்ளனர். SLT யின் உள்ளக சேவைகள் குறுகிய காலத்தில் மீளமைக்கப்படும். எமது நிபுணர் குழுக்கள் இந்த அச்சுறுத்தலை ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறிந்து, இந்தப் பிரச்சினையை வெற்றிகரமாக தனிமைப்ப டுத்தியுள்ளனர்.

எமது அனைத்து அரசாங்க மற்றும் வணிக சேவைகள், குரல் வழி சேவைகள், புரோட்பாண்ட் சேவைகள், பியோ TV மற்றும் தொகுதி சேவைகள் என்பன இந்த உள்ளக பிரச்சினை காரணமாக எவ்வித தாக்கத்திற்கும் உட்படவில்லை என்பதையும், வாடிக்கையாளர்களின் தகவல்கள் பாதுகாப்பாக உள்ளன என்பதையும் SLT உறுதிப்படுத்த விரும்புகிறது.

புரோட்பாண்ட் சேவைகளுக்கு மிகைப்படியான நிதியை வேண்டுதல் போன்ற பெறுமதிகூடிய சேவைகள் ஒன்லைன் மூலம் MySLT app ஊடாகவும் 1212 என்ற இலக்கத்தை தொடர்புகொள்வதன் மூலமும் வழங்கப்படுகிறது.

காலத்திற்குக் காலம் உலகம் பூராகவும் தகவல் தொழில்நுட்ப முறைமைகளைப் பாதித்து வரும் ஒரு REvil தாக்குதல் இதற்குக் காரணமாகும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. தற்போதைய பயங்கரமான இவ்வகையான இணைய தாக்குதல்களைக் கருத்திற் கொண்டு சாத்தியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இயன்றளவில் மேற்கொள்ளுமாறு நாம் எமது வாடிக்கையாளர்களுக்கு அறிவுறுத்துகின்றோம்.

SLT முகாமைத்துவம்

# சுதந்திரத்திற்குப் பின்
# இலங்கை பாராளுமன்றத் தேர்தல்கள்

10

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



| பாராளுமன்றத் தேர்தல் 1965 | | | | |
|---|---|---|---|---|
| | வேட்பாளர்கள் | | | |
| A-போட்டியிட்டோர்<br>B- தெரிவு செய்யப்பட்டோர்<br>C- போடப்பட்டமொத்த வாக்குகள் | A | B | C | % |
| ஐக்கிய தேசிய கட்சி | 116 | 66 | 1,590,929 | 39.31% |
| சிறீலங்கா சுதந்திரக்கட்சி | 101 | 41 | 1,221,437 | 30.18% |
| இலங்கைத் தமிழரசுக்கட்சி | 20 | 14 | 217,914 | 5.38% |
| லங்கா சமசமாஜகட்சி | 25 | 10 | 302,095 | 7.47% |
| சிறீலங்கா சுதந்திர சோசலிசக்கட்சி | 32 | 5 | 130,429 | 3.22% |
| இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி | 9 | 4 | 109,754 | 2.71% |
| அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | 15 | 3 | 98,746 | 2.44% |
| மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி | 61 | 1 | 96,665 | 2.39% |
| தேசிய விடுதலை முன்னணி | 10 | 1 | 18,791 | 0.46% |
| சுயேட்சை | 106 | 6 | 259,960 | 6.42% |
| மொத்தம் | 495 | 151 | 4,046,720 | |

| பாராளுமன்றத் தேர்தல் 1970 | | | | |
|---|---|---|---|---|
| | வேட்பாளர்கள் | | | |
| A-போட்டியிட்டோர்<br>B- தெரிவு செய்யப்பட்டோர்<br>C- போடப்பட்டமொத்த வாக்குகள் | A | B | C | % |
| சிறீலங்கா சுதந்திரக்கட்சி | 108 | 91 | 1,839,979 | 36.86% |
| லங்கா சமசமாஜகட்சி | 23 | 19 | 433,224 | 8.68% |
| ஐக்கிய தேசிய கட்சி | 130 | 17 | 1,892,525 | 37.91% |
| இலங்கைத் தமிழரசுக்கட்சி | 19 | 13 | 245,727 | 4.92% |
| இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி | 9 | 6 | 169,199 | 3.39% |
| அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | 12 | 3 | 115,567 | 2.32% |
| மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி | 4 | 0 | 46,571 | 0.93% |
| சுயேட்சை | 136 | 2 | 249,006 | 4.99% |
| மொத்தம் | 441 | 151 | 4,991,798 | |

அதேவேளையில், போர் நிறுத்த உடன்பாட்டின் மூலம் தாம் நாட்டில் பொருளாதார மேம்பாட்டைக் கொண்டு வந்திருப்பதாகவும், ஈழப் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை எட்டவே தாம் விரும்புவதாகவும் ரணில் விக்கிரமசிங்க பரப்புரை நிகழ்த்தினார். இறுதியில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க பாராளுமன்றத்தை கலைத்து புதிய தேர்தலுக்கு அழைப்பு விடுத்தார்.

**இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 2004**

2004 இலங்கை பாராளுமன்றத் தேர்தல் இலங்கையின் 13ஆவது பாராளுமன்றத்திற்கு 225 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 2004, ஏப்ரல் 4 இல் இடம்பெற்றது. 12ஆவது பாராளுமன்றத் தேர்தல் இடம்பெற்று மூன்றாண்டுகளுக்குள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அதனைக் கலைத்து புதிய தேர்தலுக்கான அறிவித்தலை விடுத்தார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் மக்கள் விடுதலை முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, தேச விமுக்தி ஜனதா கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன, முஸ்லிம் தேசிய ஐக்கியக் கூட்டமைப்பு, இலங்கை மக்கள் கட்சி கூட்டுச் சேர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி **(UPFA)** என்ற கூட்டணியை அமைத்தது.

2001 தேர்தலில், மக்கள் கூட்டணியும் மக்கள் விடுதலை முன்னணியும் வெவ்வேறாகப் போட்டியிட்டன. அப்போது ம.வி.மு. **9.1%** வாக்குகளைப் பெற்று 16 இடங்களைக் கைப்பற்றியிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி சிறிய கட்சிகளான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற சிறிய கட்சிகளுடன் இணைந்து ஐக்கிய தேசிய முன்னணி (ஐ.தே.மு.) என்ற கூட்டணியில் போட்டியிட்டது.அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரில் தமிழ் அரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டது.

225 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசு 82 இடங்களை மட்டும் கைப்பற்றி தேர்தலில் தோற்றது. எதிர்க்கட்சிக் கூட்டணியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி 105 இடங்களை வென்றது. அறுதிப் பெரும்பான்மைக்கு எட்டு இடங்கள் போதாமல் இருந்தும் அது ஆட்சியமைத்தது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்னாள் தொழிலமைச்சர் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக அறிவித்தார். ஐ தே.முவைச் சார்ந்த எதிர்க்கட்சி வேட்பாளரான டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டார ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி வேட்பாளரான டி. யூ. டபிள்யூ. குணசேகர பெற்ற 109 வாக்குகளுக்கெதிரான 110 வாக்குகளைப் பெற்று சபாநாயகர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

பௌத்த, சிங்கள தேசியவாதக்கட்சியான ஜாதிக ஹெல உறுமய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (த.தே.கூ.), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) போன்றவையும் தேர்தலில் பாராளுமன்ற இருக்கைகளைப் பெற்றன. இவற்றை விட பல சிறிய கட்சிகளும் (10) தேர்தலில் போட்டியிட்டன. அவையாவன, தேசிய மக்கள் கட்சி, சிங்கள மகாசம்மத பூமிபுத்ர கட்சி, சுவராச்சிய, இலங்கை முற்போக்கு முன்னணி, ருகுணை மக்கள் கட்சி, இலங்கை தேசிய முன்னணி, லிபரல் கட்சி, இலங்கை முஸ்லிம் கட்சி,சோசலிச சமத்துவக் கட்சி, சனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகும். இவ் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து மொத்தமாகப் பெற்ற வாக்குகள் 7069 **(0.08%)** ஆகும்.

**2004ஆம் ஆண்டுத் தேர்தலின் பின் நடந்தவை**

கடைசியாக இலங்கை பாராளுமன்றத்துக்காக 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 இல் இடம்பெற்றது. மொத்தம் 225 தொகுதிகளில் புதிதாக உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி **(UPFA)** 105 இடங்களைக் கைப்பற்றி அதிக இடங்களைக் கைப்பற்றிய கட்சியானது. ஆட்சியமைப்பதற்குப் பெரும்பான்மையில்லாத நிலையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஒரேயொரு உறுப்பினருடன் இணைந்து சிறுபான்மை அரசை நிறுவியது.

2004, ஏப்ரல் 6 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக அறிவித்தார். அமைச்சரவையின் ஏனைய உறுப்பினர்கள் ஏப்ரல் 10 இல் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். 2004 ஏப்ரல் 22 இல் புதிய பாராளுமன்றம் கூடியது. அன்றிலிருந்து எதிரணியில் இருந்து கட்சி தாவி ஆளும் கூட்டணியில் இணைந்து கொண்டோருடன் சேர்த்து ஆளும் கூட்டணியின் பலம் 129 இற்கு அதிகரித்தது. இவர்களில் பலருக்கு அமைச்சரவையில் இடம் கொடுக்கப்பட்டது: 9 ஓகஸ்ட் 2004: இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் மூவர் இணைந்தனர். 3 செப்டெம்பர் 2004: இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி எட்டு உறுப்பினர்களுடன் ஆளும் கூட்டணியில் இணைய, அரசாங்கத்துக்கு பெரும்பான்மை கிடைத்தது. 16 ஜூன் 2005: ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தனது 39 உறுப்பினர்களுடன் அரசில் இருந்து விலகியது. 25 ஜனவரி 2006: ஐக்கிய தேசியக் கட்சியின் நான்கு உறுப்பினர்கள் அரசுடன் இணைந்தனர். 28 ஜனவரி 2007: ஐதேகவின் 18 உறுப்பினர்களும், முஸ்லிம் காங்கிரஸின் 6 பேரும் அரசுடன் இணைந்தனர். 12 டிசெம்பர் 2007: முஸ்லிம் காங்கிரஸின் நான்கு உறுப்பினர்கள் அரசில் இருந்து விலகினர். 28 டிசெம்பர் 2008: மே 2008 இல் ஜே.வி.பியில் இருந்து விலகி தேசிய விடுதலை முன்னணி என்ற கட்சியை அமைத்த 12 உறுப்பினர்கள் அரசுடன் இணைந்தனர்.

**இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 2010**

2010 இலங்கை பாராளுமன்றத் தேர்தல் இலங்கையின் 14ஆவது பாராளுமன்றத்திற்கு 225 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 2010, ஏப்ரல் 8 இல் இடம்பெற்றது. 2010 பெப்ரவரி 10 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 13ஆவது பாராளுமன்றத்தைக் கலைத்தார். வேட்பு மனுக்கள் பெப்ரவரி 19 இலிருந்து பெப்ரவரி 26 வரை ஏற்றுக்கொள்ளப்பட்டன. 14,088,500 இலங்கையர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். 30 ஆண்டுகள் நீடித்த ஈழப் போர் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் முடிவடைந்த பின்னர் இடம்பெற்ற முதலாவது பொதுத்தேர்தல் இதுவாகும். இத்தேர்தலில் முக்கிய கட்சிகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி, முக்கிய எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிதலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி, இலங்கை தமிழரசுக் கட்சி, மற்றும் ஜனநாயகத் தேசியக் கூட்டணி ஆகியவையாகும்.(தொடரும்)

# அனைத்துப் பிள்ளைகளுக்கும் உரிய காலத்தில் நோயெதிர்ப்பு சக்தியைப் பெற்றுக் கொடுப்பதில் முறையான திட்டம் முன்னெடுப்பு - கோட்டா

(கொழும்பு)

அனைத்துப் பிள்ளைகளுக்கும் உரிய காலத்தில் நோயெதிர்ப்பு சக்தியைப் பெற்றுக் கொடுப்பதில் இலங்கை முறையான திட்டத்தை முன்னெடுத்துள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.


நேற்று முன்தினம் 2020 உலக தடுப்பூசி மாநாட்டை முன்னிட்டு காணொளி மூலம் ஜனாதிபதி வழங்கிய உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் பிறக்கும் அனைத்துப் பிள்ளைகளுக்கும் தரமான நோய்த்தடுப்பு சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வசதிகள் மற்றும் சமமான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.


உலகில் தற்போது தாக்கத்தை ஏற்படுத்தி வரும் கொவிட் -19 நோய்த்தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறும் வகையில் சிறுவர்களுக்கான தடுப்பூசி வழங்குதலை மீள ஆரம்பிப்பது அவசியம் எனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

உலகில் வறுமைக்கோட்டின் கீழுள்ள நாடுகளுக்கு



மலேரியா, கொலரா, எயிட்ஸ், தட்டம்மை போன்ற தொற்று நோய்களைத் தடுப்பதற்கு தேவையான தடுப்பூசிகளை விநியோகிப்பதற்கென 7.4 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியைத் திரட்டும் நோக்கில் குறித்த மாநாடு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# மனநலம் பாதிக்கப்பட்ட சிறுவன் மீது தாக்குதல் கடமை தவறிய பொலிஸார் பணி இடை நிறுத்தம்!



(அளுத்கம)

அளுத்கம-தர்கா நகர் அம்பகஹ சந்தி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் காவலரணில் கடந்த மே 25 ஆம் திகதி கடமையாற்றிய பொலிஸாரால் 14 வயது மனநலம் பாதிக்கப்பட்ட சிறுவன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கடமை தவறிய குற்றச்சாட்டில் மூன்று பொலிஸார் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

உபபொலிஸ் பரிசோதகர், பொலிஸ் சார்ஜன், பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகிய மூவரின் பணிகளே இவ்வாறு இடை நிறுத்தப்பட்டுள்ளன.

களுத்துறை பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் களுத்துறை பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையில் களுத்துறை முதலாம் பிரிவு பொலிஸ் அத்தியட்சகரால் முன்னெடுக்கப்பட்ட விசேட மேலதிக விசாரணைகளுக்கமைய இந்தப் பணி இடை நிறுத்த தீர்மானம் எடுக்கப்பட்டு அம்மூவரும் இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

பணி இடை நிறுத்தம் செய்யப்பட்ட உப பொலிஸ் பரிசோதகரும் சார்ஜனும் விசேட கடமைகளுக்காக களுத்துறை பொலிஸ் வித்தியாலயத்திலிருந்து குறித்த காவலரணுக்கு வரவழைக்கப்பட்டிருந்தவர்கள் எனவும் கான்ஸ்டபிள் அளுத்கமை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

இவ்வாறான பின்னணியில் இச் சம்பவம் குறித்த விசாரணைகளை முன்னெடுக்க டபிள்யூ. ஏ.சி.ஏ.பி.பீ. எனப்படும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் துஷ்பிரயோக தடுப்புப் பணியகத்தின் பொலிஸ் அத்தியட்சகருக்கு பதில் பொலிஸ்மா அதிபரை பணித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பி.சி.ஆர்.பரிசோதனையை நிராகரித்த அமெ.தூதரகப் பெண் தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

பி.சி.ஆர்.பரிசோதனையை நிராகரித்து நாட்டுக்குள் நுழைந்த அமெரிக்கத் தூதரகப் பெண் அதிகாரி, தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இவர் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட உள்ளாரென கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம், அரசுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது:

குறித்த பெண் அதிகாரி டுபாயிலிருந்து கடந்த வியாழக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனை செய்ய அவர் மறுத்தமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையிலேயே அவர், தனிமைப்படுத்தப்பட உள்ளாரென கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

இதேவேளை இலங்கைக்கு வருகை தரும் இராஜதந்திரிகள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அவர்கள் எந்த நாட்டிலிருந்து வருகை தருகிறார்களோ அந்நாட்டில் 72 மணித்தியாலங்களுக்கு முன் பெறப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனை அறிக்கையை கட்டுநாயக்க விமான நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் இந்தப் பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறும் அனைத்து இராஜதந்திரிகள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு பரிசோதனைகளுக்கு முகம் கொடுக்காத குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் மீது தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தற்பெருமை!

மனிதனுக்கு உடம்பும் வலுவாக இருக்க வேண்டும். அதே நேரத்திலே அறிவும் வலுவாக இருக்க வேண்டும்.

தினமும் நாம் ஏகப்பட்ட மனிதர்களைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். அதிலே சில பேருக்கு உடல் பலம் மட்டும் அதிகமாக இருக்கும். சிலபேருக்கு அறிவு பலம் மட்டும் அதிகமாக இருக்கும்.

ஆனால் அதேசமயத்திலே அவர்களுக்கு இன்னொரு பலவீனமும் இருக்கும். அதாவது தற்பெருமை. தான் ரொம்ப பலசாலி என்கிற நினைப்பு அவர்களுக்கு இருந்துகொண்டேதான் இருக்கும்.

பலம் இருந்தும் பல சந்தர்ப்பங்களிலே அவர்கள் தோற்றுப் போகிறதுக்குக் காரணம் இந்தப் பலவீனம் தான்.

சீன தேசத்திலே ஒரு பெரியவர் இருந்தார். "எப்பெண்டி" என்று பெயர். பெரிய அறிஞர். ஒருநாள் அவரைத் தேடிக்கொண்டு ஒருத்தன் வந்தான். வந்தவன் உடலாலே பலசாலி. அவன் இவரைப் பார்த்துச் சொன்னான்...

ஐயா நான் ரொம்பவும் பலசாலி!" அதாவது நான் உடலாலே பலசாலி. நீங்கள் அறிவாலே பலசாலி. நாம் இரண்டு பேரும் சேர்ந்து இருந்தால் நல்லதே.

நாம் நண்பர்களாக இருப்போமே என்றான். அந்தப் பெரியவர் இவனைக் கொஞ்சநேரம் உற்றுப் பார்த்தார். பின்பு கேட்டார்...

"சரியப்பா...நீ எந்த வகையிலே பலசாலி? என்று கேட்டார். உடனே அவன் தன்னைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான்.

"ஒரு பெரிய பாறாங்கல்லை அப்படியே தூக்கி என்னாலே எறிய முடியும். நம் ஊர் எல்லைக்கு வெளியே நின்று கல்லைத் தூக்கி எறிந்தேனென்றால் அது நம் நகரத்து சுவரைத் தாண்டிக் கொண்டு போய் உள்ளே விழுந்துவிடும். அவ்வளவு வேகமாக கல்லை வீச என்னாலே முடியும்" என்றான். பெரியவர் பார்த்தார்...

"சரி வா ஒரு சோதனை செய்து பார்ப்போம்" என்று சொல்லி அவனை அழைத்துக்கொண்டு போனார். இரண்டு பேருமாகச் சேர்ந்து அந்த நகரத்தின் மைதானப் பகுதிக்கு வந்தார்கள். அந்தப் பெரியவர் தன்னுடைய சேட் பொக்கற்றிலே இருந்து ஒரு சின்ன பட்டுக் கைக்குட்டையை எடுத்தார். அவனிடம் கொடுத்தார்.

"இந்தாப்பா நீ ரொம்ப பலசாலி என்கிறாயே. இந்த சின்னத் துணியை சுவருக்கு அப்பாலே போய் விழுகிற மாதிரி உன்னாலே வீசி எறிய முடியுமா?" என்றார்.

"என்னங்க இது ஒரு பெரிய பாறாங்கல்லையே தூக்கி எறிபவன் நான். இந்தச் சின்னத் துணியையா என்னாலே தூக்கி எறிய முடியாது?" கொடுங்கள் இப்படி என்று அதை வாங்கினான்.

பலம் கொண்ட மட்டும் வேகமாக வீசி எறிந்தான். கனம் இல்லாத அந்தக் கைக்குட்டை சுவரைத் தாண்டிப் போகவில்லை. கொஞ்சத் தூரம் மேலே போய் திரும்பவும் வந்து தரையிலேயே விழுந்தது. பெரியவர் சிரித்தார்.

"என்ன நண்பா! முடியவில்லையா?" என்றார். அவன் பேசாமல் நின்றுகொண்டிருந்தான். "என்னாலே முடியும்"என்றார் பெரியவர். அவன் ஆச்சரியமாக இவரைப் பார்த்தான். பெரியவர் அந்தக் கைக்குட்டையை எடுத்தார். ஒரு சின்னக் கல்லை அந்தத் துணிக்குள்ளே வைத்தார்.

கல் தெரியாத அளவுக்கு துணியாலே மூடி சுருட்டிப் பிடித்தார். இப்ப அந்தக் கல்லோடு சேர்த்து அந்தக் கைக்குட்டையை வேகமாக வீசி எறிந்தார். இப்ப அந்தத் துணியும் கல்லோடு சேர்ந்து சுவருக்கு அப்பாலே போய் விழுந்தது.

இப்பதான் அவனுக்குப் புரிந்தது. உடல்பலத்தை விட அறிவுபலம் பெரிது என்பது.

அவன் தன்னுடைய தோல்வியை ஒத்துக்கொண்டான். உடல் பலமும் அறிவு பலமும் சேர்ந்து இருந்து விட்டால் அது சிலசமயம் ஆபத்தாகக் கூடப் போய்விடும்.

சிங்கத்துக்கு உடல் பலம் அதிகம். அதனிடம் அறிவு பலமும் அதிகமாக இருந்து விட்டால் என்ன ஆகும் தெரியுமா? இந்தக் கதையைக் கேளுங்கள்.

ஒரு ஆசாமி காட்டு வழியாக போய்க்கொண்டிருந்தான். திடீரென்று ஒரு சிங்கம் எதிரிலே வந்து கொண்டிருந்தது. இந்த ஆளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

உடனே அந்த இடத்திலேயே உட்கார்ந்து கண்ணை மூடிக் கொண்டு கடவுளை வேண்ட ஆரம்பித்தான். இதைப் பார்த்து விட்டு அந்தச் சிங்கமும் அவனுக்குப் பக்கத்திலேயே வந்து உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண்டிருந்தது.

அந்த ஆள் இதைப் பார்த்தான். சிங்கத்திடம் சொன்னான்...

"அருமை சகோதரனே! உன்னைப் பார்த்ததும் எங்கே என் உயிர் போய் விடுமோ என்று பயந்தேன். நல்லவேளை நீயும் என்னோடு சேர்ந்து கடவுளை நினைக்க ஆரம்பித்துவிட்டாய். இப்படி உன்னைப் பார்க்கிறதுக்கு எனக்கு எவ்வளவு சந்தோச மாக இருக்குத் தெரியுமா?" என்றான்.

உடனே அந்தச் சிங்கம் இவனைப் பார்த்து..."பேசாமல் இரு. சத்தம் போடாதே. உன்னை எனக்கு இரையாக சாப்பிடக் கொடுத்த அந்த இறைவனுக்கு இப்ப நான் கண்ணை மூடி நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறேன்" என்றது.

முயற்சி, முயற்சி! தோல்வி. சரி மீண்டும் முயற்சி, முயற்சி! தோல்வியா? சரி, இந்த வகை முயற்சி வெற்றி தராது எனக் கண்டுபிடித்ததில் வெற்றி பெற்று விட்டோம்! இப்போது – மீண்டும் புது முயற்சி. – *நெப்போலியன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உன் உரிமைக்காக நீயே உரக்கக் குரல் கொடு

**தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாடுகள் ஆட்சியாளர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.**

**கொரோனாத் தொற்றுக் காரணமாக சர்வதேச அழுத்தங்கள் அறவே இல்லாத நிலையில், தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வும் மறந்து போன விடயமாகிறது.**

**இலங்கையில் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துன்பங்கள் இன்னும் தீரவில்லை.**

**2009ஆம் ஆண்டு முற்றுப் பெற்ற யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். எனினும் அதற்கான நீதி கிடைக்கப் பெறவில்லை.**

**தமிழ் மக்களின் அரசியலுக்கான பொறுப்பை ஏற்றுக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது தொடர்பில் தனது பலத்தை – இராஜதந்திர வியூகத்தைப் பிரயோகிக்காமல், சிங்கள ஆட்சியாளர்களின் காலம் கடத்தும் கபடத்தனத்துக்கு இடம் கொடுக்க,**

**போர்க்குற்றம் நடந்து பத்து ஆண்டுகள் கடந்தும் எதுவும் இல்லை என்ற நிர்க்கதி நிலைக்கு தமிழ் மக்களை ஆளாக்கியுள்ளது.**

**அதிலும் குறிப்பாக ஐ.நா் மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசாங்கத்துக்கு விதித்த நிபந்தனைகளை நிறைவேற்ற கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை தலையசைக்க; காலம் கடத்தும் சிங்களப் பேரினவாதத்தின் திட்டம் எளிதாக நிறைவேறிற்று.**

**இவை கடந்த காலத்தில் நடந்தேறிய உலகறிந்த விடயம்.**

**இவை ஒருபுறமிருக்க, இப்போது கொரோனாத் தொற்று உலகம் முழுவதற்கும் பிரச்சினையாகிவிட,**

**ஈழத் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினை மறைபொருளாயிற்று.**

**உலகம் முழுவதையும் முடங்க வைத்திருக்கும் கொரோனா இன்னும் ஓரிரண்டு வருடங்களில் குணமாகிவிடலாம்.**

**ஆனால் எங்கள் இனப்பிரச்சினை என்பது தீர்வற்றதாகவே இருக்கப் போகின்றது.**

**எனவே தமிழ் மக்கள் எப்போதும் தமக்கான உரிமையை உரக்கச் சொல்வதற்குத் தயாராக இருக்க வேண்டும்.**

**உலகத்தை முடக்கி வைத்துள்ள கொரோனா காலம் எங்கள் விடயத்தைச் சொல்வதற்குப் பொருத்தமானதல்ல என்று நினைத்து எங்கள் உரிமை விவகாரத்தை நாங்களே கிடப்பில் போடுவோமாயின் அது தானாகவே மறக்கப்பட்டு விடும்.**

**எனவே எங்கள் உரிமைக்குரல் எப்போதும் உரக்க ஒலிக்க வேண்டும்.**

**அதுவொன்றுதான் கொரோனாவைக் கடந்தும் எங்கள் அவலத்தை உலகெங்கும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கும்.**

### அமெரிக்க அதிகாரி விவகாரம்

# இராஜதந்திர பிரகடனத்திற்கு எதிராகச் செயற்பட்டுள்ளார்

## தமரா குணநாயகம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பி.சி.ஆர். சோதனைக்குட்பட மறுத்ததன் மூலம் அமெரிக்க அதிகாரி, தூதரக உறவுகள் தொடர்பான இராஜதந்திர பிரகடனத்திற்கு எதிராக செயற்பட்டுள்ளார் என ஜெனீவாவிற்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் தமரா குணநாயகம் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்கத் தூதரகப் பெண் அதிகாரி நாட்டிற்குள் நுழைந்தபோது பி.சி.ஆர்.சோதனைக்கு உட்பட மறுத்தமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராஜதந்திர விடுபாட்டுரிமை ஒரு நாடொன்றின் சட்டங்களையும் விதிமுறைகளையும் மீறுவதற்கு அனுமதிக்கவில்லை என்றும் குற்றவியல் மற்றும் சிவில் நியாயாதிக்கத்திற்கு மாததிரமே விடுபாட்டுரிமை வழங்கப்படுகின்றது என்றும் வியன்னா பிரகடனம் விடுபாட்டுரிமைக்கும கட்டுப்பாடுகளை விதித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

அவை இராஜதந்திரிகள் தவறாக நடந்து கொள்வதற்கான அனுமதியை வழங்கவில்லை எனவும் தமரா குணநாயகம் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

## கச்சாய் அம்மன் ஆலய பொங்கல்விழா மட்டுப்படுத்தப்பட்டளவில் இடம்பெறும்

(சாவகச்சேரி)

செடில் மற்றும் தூக்குக் காவடிகளுக்கு அனுமதி இல்லை, அன்னதானம், தாகசாந்தி உள்ளிட்டவையும் இடம்பெறமாட்டாது.

தென்மராட்சி–கச்சாய் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் விழா நாளை 8 ஆம் திகதி திங்கட்கிழமை கொரோனா அச்சம் காரணமாக சுகாதாரக் கட்டுப்பாடுகளுடன் மட்டுப்படுத்தப்பட்டளவில் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

பொங்கல் விழாவிற்கு வரும் அடியவர்கள் சமூக இடைவெளியைப் பேணுவதுடன் கட்டாயம் முகக்கவசம் அணிதலும் வேண்டும்.

காய்ச்சல், தடிமன், தொண்டை வலி மற்றும் இருமல் இருப்பின் ஆலயத்திற்கு வருவதனைத் தவிர்க்கவும்.

ஆலயத்திற்குள் பிரவேசிக்க முன்னர் கை, கால்களை தொற்று நீக்கம் செய்ய வேண்டும்.

ஆலய வளாகத்தினுள் எச்சில், வெற்றிலை துப்புவதை தவிர்க்குமாறும் ஆலய பரிபாலன சபையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

மேற்கூறப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்டு பொங்கல் விழா சிறப்பாக இடம்பெற ஒத்துழைக்க வேண்டும் என ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (2-5-30)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 8ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** சாந்தபுரத்திலும்,

**வவுனியா பிரதேசத்தில்** சாளம்பைக்குளம் ஒருபகுதி, துட்டுவாகை ஒருபகுதி, பகல அளுத்வத்த கிராமம், பத்தினியார் மகிழங்குளம் கிராமம், தவசிகுளம் கிராமம், சூடு வெந்தபுலவு கிராமம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** சீனத்துறைமுகம், வங்காலை ஒருபகுதி, இசைமலைத்தாழ்வு, முள்ளிப்பழம், தள்ளாடி, கடலோரி வீதி, சாந்திபுரம், South bar, தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத் தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இந்தியப் பிரஜைகளை அழைத்துச் செல்ல 2 இந்திய விமானங்கள் நாட்டிற்கு வருகை

(கொழும்பு)

கொரோனா தொற்று காரணமாக நாட்டில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள இந்தியப் பிரஜைகளை அழைத்துச் செல்ல 2 இந்திய விமானங்கள் நாட்டை வந்தடையவுள்ளன.

வந்தே பாரத் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தின் மூன்றாம் கட்ட நடவடிக்கையாக இந்திய விமானங்கள் நாட்டிற்கு வரவுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.


கொழும்பிலிருந்து டில்லி மற்றும் பெங்களூருக்கு இந்த விமான சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதற்கமைய எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பிலிருந்து பெங்களூருக்கும் எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்பிலிருந்து டில்லிக்கும் குறித்த இரண்டு விமான சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**விடியற்காலையில் எழுந்து செயற்படுபவனுடைய வாழ்க்கை சூரியனைப் போன்று என்றும் பிரகாசமாக இருக்கும். - இங்கர்சால்**

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள், ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியதாகும்.
- மனித ஞானத்தைவிட கடவுளின் மடமை ஞானமிக்கது. மனித வலிமையை விட, அவருடைய வலுவின்மை வலிமைமிக்கது.
- கடவுள் மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் புதிய ஆற்றலை பெறுவர். அவர்கள் ஓடுவர், களைப்படையார், நடந்து செல்வர், சோர்வடையார்.
- நீ செய்ய நினைக்கும் செயல் எதுவோ அதைச் செய். அதையும் உனக்கு ஆற்றல் இருக்கும்போதே செய்.
- உங்களுக்குள் ஒருவருக்கொருவர் மட்டுமின்றி அனைவருக்கும், எப்போதும் நன்மை செய்யவே விரும்புங்கள்.
- ஒரே எண்ணமும், ஒரே அன்பும், ஒரே உள்ளமும் கொண்டவராய்த் திகழ்ந்து, ஒரு மனத்தவராயிருந்து என் மகிழ்ச்சியை நிறைவாக்குங்கள்.
- கடவுளிடம் அன்பு செலுத்துவோர், தம் சகோதர சகோதரிகளிடமும் அன்பு செலுத்தட்டும்.
- அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலைத்த வாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள்.

# இனவெறிக்கெதிரான பேரணியில் கனடா பிரதமர் பங்கேற்பு



(ஒட்டாவா)

ஜோர்ஜ் ஃபிலாய்ட் கொலை செய்யப்பட்டதை கண்டித்தும், இனவெறிக்கு எதிராக கனடாவில் நடைபெற்ற பேரணியில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பங்கேற்றார்.

அமெரிக்காவின் மின்னசோட்டா மாநிலத்தில் கடந்த மாதம் 25 ஆம் திகதி கறுப்பினத்தவரான ஜோர்ஜ் ஃபிலாய்ட் என்பவர் பொலிஸ் பிடியில் கொல்லப்பட்டார். அவர் கொல்லப்பட்டதற்கு நீதி வழங்க வேண்டும் என்று அமெரிக்காவில் மக்கள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர். வெள்ளை மாளிகை முன்பும் அடுத்தடுத்து போராட்டங்கள் நடைபெறுகின்றன. போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியும் தடியடி நடத்தியும் விரட்டியடிக்கின்றனர்.

பல ஆண்டுகளாக கறுப்பினத்தவர்கள் அடக்குமுறையை சந்தித்து வருவதால் இந்த போராட்டம், இனவெறிக்கு எதிரான போராட்டமாக வலுவடைந்து வருகிறது. அமெரிக்கா தவிர பல்வேறு நாடுகளிலும் இந்த போராட்டம் விரிவடைந்துள்ளது.

அவ்வகையில் கனடா தலைநகர் ஒட்டாவாவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் அந்நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பங்கேற்றார்.

பேரணி நடைபெற்றுக் கொண்டிருந்த போது, எந்த முன்னறிவிப்பும் இன்றி திடீரென ஜஸ்டின் ட்ரூடோ பேரணியில் இணைந்து நடந்து வந்தார். இது அனைவரையும் ஆச்சரியம் அடையச்செய்தது. அமெரிக்காவில் கொல்லப்பட்ட ஜோர்ஜ் ஃபிலாய்டிற்கு மரியாதை செலுத்தும் வகையில், பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ 9 நிமிடங்கள் முழங்காலிட்டு மௌன அஞ்சலி செலுத்தினார். (2-5)

# வீழ்ந்து நொருங்கியது விமானம்; 2 குழந்தைகள் உட்பட ஐவர் பலி!




(திபிலிசி)

ஜோர்ஜியாவில் சிறிய ரக விமானம் தீப்பிடித்து விழுந்து நொருங்கியதில் 2 குழந்தைகள் உள்ளிட்ட 5 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் புளோரிடா மாநிலம் வில்லிஸ்டனைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர், உறவினரின் இறுதிச்சடங்கில் பங்கேற்பதற்காக இண்டியானாவுக்கு நேற்று முன்தினம் மாலை சிறிய ரக விமானத்தில் சென்றனர். அவ் விமானத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 குழந்தைகள் உள்ளிட்ட 4 பேர் மற்றும் விமானி என மொத்தம் 5 பேர் பயணித்தனர்.

இந்த விமானம் ஜோர்ஜியா வான்பகுதியில் சென்றபோது, திடீரென தீப்பற்றி எரிந்து தரையில் விழுந்து நொருங்கியது. இந்த விபத்தில் விமானத்தில் இருந்த 5 பேரும் உயிரிழந்தனர். விபத்து குறித்த விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-5)

# பழங்குடியினரின் பாரம்பரிய பாறைக்குகைகள் தகர்ப்பு



(கன்பரா)

உலக நாடுகள் வளர்ச்சி, முன்னேற்றம், பொருளாதார வளம் என்ற பெயரில் சில நிறுவனங்களின் நலன்களுக்காக நாட்டின் இயற்கை வளங்களை சுரண்ட அனுமதிக்கின்றன. இதில் பெரிதும் பாதிக்கப்படுவது இனக்குழுக்களாக வாழும் பழங்குடி மற்றும் பூர்வக்குடி மக்களே.

பொருளாதார வளர்ச்சி என்ற பெயரில் பாரம்பரிய சின்னங்கள், கலாசாரப் பொக்கிஷங்கள் அழிக்கப்படுவது வாடிக்கையாகி வருகிறது.

அவுஸ்திரேலியாவில் 46 ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த பூர்வக்குடி மக்களின் பாரம்பரிய சின்னமான இரு பாறைக்குகைகளை சுரங்க நிறுவனம் ஒன்று வெடி வைத்துத் தகர்க்க அங்கு கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

பூர்வக்குடியினரின் பாரம்பரியம் வரலாற்றுச் சின்னங்கள் இங்கு அழிக்கப்படுவது முதல் முறையல்ல. ஜுகான் குகைகள் தகர்க்கப்பட்ட நாளை வரலாற்றின் கறுப்பு நாள் என்று யுனெஸ்கோ வர்ணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-5)

# கொவிட்-19 தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஜி-20 நாடுகள் நிதியுதவி

(மெக்ஸிக்கோ)

கொவிட்-19 தொற்று பரவலுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு நிதியுதவி வழங்க ஜி-20 நாடுகள் முன்வந்துள்ளன.

21 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிக நிதியை திட்டத்திற்கென வழங்க ஜி-20 அமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

குறித்த நிதி, தடுப்பூசி மருந்துகள் தயாரிப்பு, மருத்துவ ஆராய்ச்சிக்கென செலவிடப்படவுள்ளது.

கொவிட்-19 பரவலை தடுக்கும் செயற்பாடுகளுக்கு முன்வருமாறு கடந்த ஏப்ரல் மாதம் ஜி-20 நாடுகளினூடாக அரச சார்பற்ற நிறுவனங்கள், நன்கொடையாளர்கள் மற்றும் தனியார் துறையினருக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஜி-20 அமைப்பில் அங்கம் வகிக்கும் சவுதி அரேபியா தொற்றுநோய் தடுப்புப் பணிக்கென 500 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியாக வழங்கத் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-5-8)

# அமெரிக்க கைதி விடுதலை சமாதானத்துக்கான சமிக்ஞை

## ஈரானுக்கு நன்றி தெரிவித்த ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்க கைதியை ஈரான் விடுதலை செய்தது. இதற்காக ஈரானுக்கு ட்ரம்ப் நன்றி தெரிவித்ததுடன் இரு தரப்பு ஒப்பந்தத்துக்கு வாய்ப்பு உண்டு எனவும் தெரிவித்தார்.

அமெரிக்க நாட்டை சேர்ந்தவர், மைக்கேல் ஒயிட் (வயது-48). இவர் கடந்த 2018 ஆம் ஆண்டு ஈரான் நாட்டின் மஷாத் நகரில் உள்ள தனது உறவினரைச் சந்திக்கச் சென்றார்.

அங்கு அவர் ஈரான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். குறிப்பிடப்படாத குற்றச்சாட்டின் கீழ் அவருக்கு கடந்த ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இப்போது அவரை ஈரான் அரசு விடுதலை செய்துள்ளது.

ஈரான் நாட்டின் விஞ்ஞானி சிரஸ் அஸ்காரி அமெரிக்க பல்கலைக்கழகத்தின் இரகசியங்களை வியாபாரம் செய்ய முயற்சித்ததாக தண்டிக்கப்பட்டிருந்தார். அவரை அமெரிக்கா விடுதலை செய்தது. அதைத் தொடர்ந்து அவர் ஈரான் திரும்பினார்.

இந்தத் தருணத்தில் அமெரிக்க கைதி மைக்கேல் ஒயிட்டை ஈரான் விடுதலை செய்திருக்கிறது. இப்போது அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளதை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உறுதி செய்துள்ளார்.

மைக்கேல் ஒயிட்டை விடுதலை செய்திருப்பதற்கு ஈரானுக்கு ட்ரம்ப் நன்றி தெரிவித்தார். இதையொட்டி அவர் டுவிட்டரில் வெளியிட்ட பதிவில், "நன்றி ஈரான்.

இது ஒப்பந்தத்துக்கு வாய்ப்பு உண்டு என்பதை காட்டுவதாக அமைந்துள்ளது" எனப் பதிவிட்டுள்ளார்.

ஈரான் அணுசக்தி தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா 2018 ஆம் ஆண்டு விலகிக்கொண்டதில் இருந்து இரு நாடுகளிடையேயும் சுமுகமான உறவு இல்லை.

ஈராக்கில் இந்த ஆண்டு ஈரான் படைத்தளபதி காசிம் சுலைமானியை அமெரிக்கா ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தி கொன்றதைத் தொடர்ந்து இரு தரப்பிலும் மோதல் உச்சம் அடைந்திருந்ததும், ஈராக்கில் உள்ள அமெரிக்க படைத்தளங்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி பதிலடி கொடுத்தது குறிப்பிடத்தக்கது. (2-5)

# பெரியகாடு தனிமைப்படுத்தலில் இருந்த ஒருவருக்கு கொரோனா தொற்று

## யாழ்.போதனா பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நேற்று சனிக்கிழமை 64 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், நேற்றைய பரிசோதனையில் பெரியகாடு தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள பெரியகாடு தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த ஒருவருடன் மேலும் 22 பேர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்த 8 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விடுதிகளில் சிகிச்சை பெற வந்த 3 பேர் மன்னார் பிராந்திய சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தில் 31 பேர் என மொத்தம் 64 பேர் ஆகியோர் இதன்போது பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## தந்தை மகள்...

மற்றும் உறவுவழிச் சிறுமி (வயது-13) ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக பசறை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மடுல்சீமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## நாட்டிற்கு வரு...

களும் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ் விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வியாழக்கிழமை நாட்டிற்கு வருகை தந்த அமெரிக்க தூதரக அதிகாரி ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு தன்னை உட்படுத்த மறுத்திருந்தமை தொடர்பில் பாரிய விமர்சனங்கள் எழுந்திருந்தன.

நாட்டில் கொரோனாத் தொற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் சட்டத்தை அனைவரும் கடுமையான முறையில் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

இதேவேளை, இலங்கையுடன் தொடர்புடைய இராஜதந்திரிகள் இலங்கையினுள் நுழையும் போது கொரோனாத்தொற்றுப் பரிசோதனை குறித்து கடைபிடிக்க வேண்டிய அறிவுறுத்தல்கள் அடங்கிய அறிக்கையை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டிருந்தது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3.8)

## மின்சாரக் கம்பி...

யில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றின் மீது நேற்று முற்பகல் 10.45 மணியளவில் மரம் ஒன்றின் கிளை முறிந்து குறித்த அதிக மின் வலுக்கொண்ட மின்கம்பி (33 ஆயிரம் வோல்ட் வலு) அறுந்து வீழ்ந்ததில் மின்சாரம் தாக்கி குறித்த இரு இளைஞர்களும் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த இருவரும் செலகம, மகவெல அகிய பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 27 வயதுடைய இளைஞர்கள் என்று பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவத்தின் போது லொறியில் மூன்று பேர் இருந்துள்ளதுடன் அவர்களுள் ஒருவர் லொறியிலிருந்து வெளியே பாய்ந்து தப்பிக் கொண்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மகவெல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## மழை பெய்யக் கூடிய சாத்தியம்...

கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்குத் திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புகளிலும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புகளும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். (ம-3)

## மக்களுக்கு ஒரு மாபெரும் சக்தி...

இரா.சம்பந்தனால் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பு எவ்வித மாற்றங்களும் இன்றி அப்படியே தரப்படுகின்றது.

மகிந்த ராஜபக்ஷ தனது அரசியல் வாழ்க்கையில் ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்திசெய்துள்ளமை தொடர்பாக அவருக்குப் பாராட்டுத் தெரிவிப்பதோடு, எனது உளமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இக்காலப் பகுதியில் அவர் ஓர் அரசியல்வாதியாக, ஒரு பாராளுமன்ற உறுப்பினராக, ஓர் அமைச்சராக, எதிர்க்கட்சித் தலைவராக, பிரதம மந்திரியாக, நாட்டின் ஜனாதிபதியாக சாத்தியமான ஒவ்வொரு பதவியிலும் இலங்கைக்குச் சேவையாற்றியுள்ளார். தான் வகித்த இவ்வொவ்வொரு பதவியிலும் அவர் தனிச் சிறப்புடன் விளங்கியதோடு, நாட்டுமக்களின் அன்பையும் நம்பிக்கையையும் வென்றெடுத்தார். அவர் அடிப்படையில் தன்னை நம்பிய, தன்னால் வழிநடத்தப்படுவதற்கு விரும்பிய சாதாரண மக்களின் ஒரு தலைவராகத் திகழ்ந்தார்.

தான் வகித்த பதவிகளிலெல்லாம் அவர் அடிப்படையில் மக்களின் ஒரு நாயகனாகவே திகழ்ந்தார். மக்கள் அவரை மதித்தார்கள் அவர் மக்களை மதித்தார். அவர் மக்களுக்கு ஒரு மாபெரும் சக்தியாக விளங்கினார். மறுபுறத்தில் மக்களே அவரது பெரும் சக்தியின் மூலமாக விளங்கினர்.

இதுவே எந்தவொரு அரசியல் தலைவரினதும் பலம்மிக்க பண்பாகும். மகிந்த ராஜபக்ஷவிடம் இப்பண்பு மிகப்பெருமளவில் நிறைந்து காணப்பட்டது. அதுவே அவரது அரசியல் வெற்றிக்குத் திறவுகோலாகத் திகழ்ந்தது. இது ஏற்றுக் கொள்ளப்படவேண்டிய ஒன்று.

இலங்கை மக்களின் சார்பாக, குறிப்பாக பாராளுமன்றத்தில் நான் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மக்களின் சார்பாக அவருக்கு எமது உளமார்ந்த வாழ்த்துக்களையும் வெற்றிகரமானதோர் அரசியல் எதிர்காலத்திற்கான எமது நல்வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாடு என்ற வகையில் இலங்கை தீர்க்கப்படாத பாரதூரமான பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. நாட்டின் அதி உன்னத சட்டமாக அமையும் புதியதோர் அரசியலமைப்பு நாட்டிற்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகிறது.

நீண்டகாலமாக மக்கள் சிந்தனையிலிருந்து வரும் மாற்றங்களை உள்ளடக்கி புதியதோர் அரசியலமைப்பை உருவாக்குவதற்கு இலங்கை மக்கள் கடந்த பல தசாப்தங்களாக தமது தேசிய ஜனநாயகத் தீர்ப்புகளில் ஆணை வழங்கியுள்ளனர். அது குறித்து பெருமளவு கருத்தொருமைப்பாடும் நிலவுகிறது.

இவ் அவசரமானதும் கட்டாயமானதுமான தேவையை நிறைவேற்றுவதற்கு மக்கள் ஆதரவு பெற்ற ஒரு பலமிக்க தலைவர் தேவை.

சந்தேகத்திற்கிடமின்றி மகிந்த ராஜபக்ஷ அந்தநிலையில் இருக்கிறார். அந்தப் பணியை ஏற்று நிறைவேற்றுவதன் மூலம் ராஜபக்ஷ மேலும் பாரிய உச்சத்திற்கு உயர்ந்தெழ வேண்டும். அது அவரை ஒரு சிறந்த இராஜதந்திரி என்ற மட்டத்திற்கு உயர்த்துவதோடு, அவருக்கு வெறுமனே தேசிய அங்கீகாரத்தை மாத்திரமின்றி சர்வதேச அங்கீகாரத்தையும் மதிப்பையும் வழங்கும். இந்த விடயத்தில் எமது முழுமையான ஆதரவு அவருக்கு உண்டு.

நீதி.சமத்துவம் மற்றும் கௌரவம் ஆகியவற்றின் அடிப்படையில் நேர்மையானதும் நிரந்தரமானதுமான ஒரு தீர்வினைக் கொண்டு வந்த ஒரு தலைவராக அவர் இலங்கை வரலாற்றில் தனக்கென ஓர் இடத்தைப் பெறுவார்.

மகிந்த ராஜபக்ஷவுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எனது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## சுகாதார அமைச்...

எனக் கூறப்படுகிறது.

பொதுத் தேர்தலை நடத்தும் தினத்தை தீர்மானிப்பதற்காக எதிர்வரும் திங்கட்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழு கூடவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தேர்தலுக்கான...

முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைவாகவும் 200 வாக்காளர்களை மையப்படுத்தியதாகவும் பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பை முன்னெடுப்பது தொடர்பில் இந்த ஒத்திகை முன்னெடுக்கப்படவுள்ளது.

அத்துடன் இந்த ஒத்திகையின் அனுபவத்துடன் நாளை திங்கட்கிழமை பொதுத் தேர்தலுக்கான திகதியை நிர்ணயம் செய்வதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

9ஆவது பாராளுமன்றத்திற்கான தேர்தல் திகதியை தீர்மானம் செய்வதற்காக நாளை திங்கட்கிழமை தலைவர் மகிந்த தேசப்பிரியவின் தலைமையில் தேர்தல்கள் ஆணைக்குழு கூடவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்கு முன்னதாக சுகாதார துறையினருடன் முக்கிய கலந்துரையாடலொன்றிலும் பங்கேற்கவுள்ளது.

தேர்தலை நடத்துவதற்குரிய உகந்த நிலைமைகள் காணப்படுகின்றமையை உறுதிசெய்வது பற்றியும், தேர்தலின்போது கடைப்பிடிக்க வேண்டிய மேலதிக பாதுகாப்பு முறைகள் பற்றியும் விரிவாக இதன்போது பேசப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

இந்தச்சந்திப்பில் சுகாதாரத் துறையினரின் கொரோனா பாதுகாப்பு தொடர்பிலான உத்தரவாதங்களையும் ஆணைக்குழு உறுப்பினர்கள் கோரவுள்ளதாக அறிய முடிகின்றது. (ம-3)

## அரசியல் அழுத்...

எவருக்கும் தெரியாது. அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் என்னிடம் இது பற்றி கேள்வி எழுப்பியுள்ளனர்.

அனைவரிடமும் நான் ஒரே மாதிரியாகவே பழகுவேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிங்கள வார இதழொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், இந்தக் காலப்பகுதியில் தங்களுக்கு அரசியல் ரீதியில் ஏதேனும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டனவா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தேர்தல்கள் ஆணைக்குழு எந்தவொரு இரகசிய சந்திப்புகளையும் நடத்தவில்லை எனவும், ஆணைக்குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடும் உரிமை தனக்கு இல்லையா எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குள் உள்ளகப் பிரச்சினைகள் இருக்கின்றனவா என, எழுப்பப்பட்ட கேள்விக்கு, அவ்வாறு பிரச்சினைகள் எதுவும் இல்லை. மாறுபட்ட கருத்துகள் உள்ளன என்று மகிந்த தேசப்பிரிய பதிலளித்தார். (ம-3)

## யாழ்.போதனா...

இதில் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருமதி லிங்கேஸ்வரி சதீஸ்குமார் (வயது 40) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே மரணமடைந்தவராவார்.

ஒரு விதமான வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குறித்த குடும்பப் பெண் கடந்த புதன்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படிருந்த நிலையில் நேற்று மாலை 6 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

நுரையீரல், சிறுநீரகம் மற்றும் உடலின் ஏனைய பாகங்கள் செயழிழந்த நிலையில் குறித்த பெண் மரணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எலிக்காய்ச்சல் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் மரணமான பெண்ணின் இரத்த மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது போன்ற வைரஸ் அறிகுறிகளுடன் யாழ்.போதனாவில் பலர் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

## ஐ.நா.வதிவிடப் பிரதிநிதியை...

பங்கேற்ற கூட்டம், யாழ்ப்பாணத்தில் நீதியரசர் விக்னேஸ்வரனின் இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது, சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் முதலில் விரிவாக அவதானம் செலுத்தப்பட்டது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் உள்ள தொல்பொருள் இடங்களைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தலைமையில் 11 பேரை உறுப்பினர்களாகக் கொண்டு நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசேட செயலணி மற்றும் 13 உறுப்பினர்களை உள்ளடக்கி பாதுகாப்பான நாடு, ஒழுக்கமான மற்றும் சட்டத்தை மதிக்கும் சமூகத்தை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணி ஆகியவற்றின் உள்நோக்கங்கள் பற்றி விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், அண்மைக் காலமாக முக்கிய பதவிகளுக்கு இராணுவ அதிகாரிகள் தொடர்ச்சியாக நியமிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதோடு, நாடு இராணுவ ஆட்சியை நோக்கி நகருகின்றதா என்ற சந்தேகமும் எழுப்பப்பட்டது.

இது தொடர்பில் விசேட கரிசனை கொள்வதோடு அடுத்த கட்டமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் கலந்துரையாடப்பட்டது.

மேலும் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான தயார்படுத்தல் தொடர்பிலும் பேசப்பட்டதோடு அதற்கு முன்னதாக, தமிழ் மக்களின் பிரச்சினைகள், தற்போதைய நிலைமைகள், பொறுப்புக்கூறல் உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் காணப்படுகின்ற மிகமோசமான பின்னடைவு நிலைமைகள் தொடர்பில் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி உட்பட முக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்களைச் சந்திப்பதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. எதிர்வரும் நாட்களில் அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதென தீர்மனிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பாதுகாப்பு படையினரை உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ள

# ஜனாதிபதி செயலணிக்கான பிரகடனத்தை கோட்டா இரத்துச் செய்ய வேண்டும்

## சர்வதேச அறங்கூறுநர் சபை வலியுறுத்து

(கொழும்பு)

**இராணுவ உளவுத்துறை மற்றும் பொலிஸ் அதிகாரிகளை முழுமையாக உள்ளடக்கி இலங்கை ஜனாதிபதியினால் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணிக்கான பிரகடனத்தை கோட்டாபய ராஜபக்ஷ இரத்துச் செய்ய வேண்டும் என ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான சர்வதேச அறங்கூறுநர் சபையின் பிராந்திய இயக்குநர் பிரடெரிக் ராவ்ஸ்கி வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது.

இந்தச் செயலணி தொடர்பில் ஜூன் 2, 2020இல், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 13 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சிறப்பு வர்த்தமானியை வெளியிட்டார்.

இதன்மூலம் பாதுகாப்பான நாடு, ஒழுக்கமான, நல்லொழுக்க மற்றும் சட்டபூர்வமான சமூகத்தை ஏற்படுத்த ஜனாதிபதி செயலணி உருவாக்கப்படுவதாக அவர் அறிவித்தார்.

இந்தச் செயலணியில் முழுமையாக இராணுவ, உளவுத்துறை மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன இந்த செயலணிக்கு தலைமை தாங்க உள்ளார்.

இந்த ஜனாதிபதி செயலணி அமைப்பானது, தனது அதிகாரங்களை மேலும் விரிவுபடுத்துவதற்காக கொரோனா வைரஸை பயன்படுத்தி கொள்ள விரும்பும் இலங்கை அரசாங்கத்தின் மற்றும் ஒரு செயலாகும் என்று ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்துக்கான சர்வதேச அறங்கூறுநர் சபையின் பிராந்திய இயக்குனர் ஃபிரடெரிக் ராவ்ஸ்கி சுட்டிக் காட்டியுள்ளார்.

போர்க்குற்றவாளிகள் உட்பட்ட படைத் தரப்பின் பலரை உள்ளடக்கியுள்ள இந்த செயலணிக்கு பரந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- சட்டத்தை மீறும் சகல குழுக்களின் சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுக்க தேவையான உடனடி நடவடிக்கைகளை எடுப்பது.
- இலங்கையில் நடத்தப்படும் சட்ட விரோத மற்றும் சமூக விரோத நடவடிக்கைகளுக்கு பொறுப்பானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது.
- சிறைச்சாலைகளிலும் அதைச் சுற்றியுள்ள எந்தவொரு சட்டவிரோத மற்றும் சமூக விரோத நடவடிக்கைகளையும் தடுப்பது.
- அரசாங்க அதிகாரிகளின் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிப்பது போன்ற அதிகாரங்கள் இதில் அடங்குகின்றன.

இந்நிலையில், இலங்கை அரசாங் கத்தின் இந்தச் செயலணி, பேச்சுச் சுதந்திரம் மற்றும் அரசியல் விமர்சகர்களை அடக்குவதற்கு மற்றொரு கருவியாக பயன்படுத்தப்படும் என்பதில் சந்தேகம் இல்லை என்று சர்வதேச அறங்கூறுநர் சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை நீதித்துறை அல்லது பாராளுமன்ற மேற்பார்வை பற்றி எந்த கரிசனையும் இல்லாமல், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களுக்கு ஏற்ப இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளமை கவலைக்குரியது என்று ராவ்ஸ்கி தெரிவித்துள்ளார்.

எனவே ஜனாதிபதி செயலணியை நிறுவும் சிறப்பு வர்த்தமானியை ரத்து செய்ய வேண்டும் என்று சர்வதேச அறங்கூறுநர் சபை கோரியுள்ளது. (ம-3)

# பொது இடங்களுக்கு அனைவரும் முகக்கவசம் அணிந்து செல்லுக

## உலக சுகாதார நிறுவனம் பரிந்துரை

(ஜெனிவா)

பொது இடங்களில் அனைவரும் முகக்கவசம் அணிய ஊக்குவிக்க வேண்டும் என்று நாடுகளுக்கு உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைத்துள்ளது.

பொது இடங்களில் கோவிட்-19 வைரஸ் தொற்றும் அபாயமுள்ளதால் முகக்கவசம் அணிவது அந்த நோய்ப் பரவலைக் குறைக்க உதவும் என சுகாதார நிறுவனம் தனது புதிய வழிகாட்டி நெறிமுறையில் குறிப்பிட்டுள்ளது.

அண்மைய வாரங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் கிடைத்த சான்றுகளின் அடிப்படையில், கொரோனா வைரஸ் பரவும் அபாயத்தைக் குறைக்க உதவும் பலவிதமான சாதனங்களில் முகக்கவசமும் ஒன்று என்றும், அது தவறான பாதுகாப்பு உணர்வைத் தருவதில்லை என்றும் அந்த நிறுவனம் தெரிவித்து இருக்கிறது.

அதே நேரத்தில், "முகக்கவசங்கள் மட்டுமே ஒருவரை கொரோனா வைரஸ் தொற்றுவதில் இருந்து பாதுகாத்து விடாது" என்று நிறுவனத்தின் தலைமை இயக்குநர் டெட்ரோஸ செய்தியாளரகளிடம் கூறினார். (ம-3)

## 40 போத்தல் கசிப்பு

# கொடிகாமத்தில் பொலிஸாரால் மீட்பு

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாகநாதன் வீதியில் நேற்று மாலை 5.00 மணிக்கு 40 போத்தல் கசிப்பு கைப்பற்றப் பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண் தப்பியோடியுள்ளார். பொலிஸார் அங்கிருநத 40 போத்தல் கசிப்பினை மீட்டுள்ளனர்.

குறித்த பெண்ணை கொடிகாமம் பொலிஸார் தேடி வருகின்றனர். (ம-3,114)

# மின்கட்டணத்தில் சிக்கலா?

## 011 239 2607
## 011 239 2608

## ஆகிய இலக்கங்களுக்கு அழையுங்கள்

(கொழும்பு)

ஊரடங்கு உத்தரவு காலத்தில் மின்பட்டியலில் ஏதாவது தீர்க்கப்படாத சிக்கல்கள் இருப்பின், உடனடியாக முறையிடும்படி இலங்கையின் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு பொதுமக்களைக் கோரியுள்ளது.

ஊரடங்கு உத்தரவு கால மின்பட்டியல் தொடர்பான சர்ச்சைகளையடுத்து, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு இந்த விவகாரத்தில் தலையிட்டிருந்தது.

ஆணைக்குழுவின் யோசனைகளை ஏற்று, இலங்கை மின்சார சபை மற்றும். இலங்கை மின்சார நிறுவனம் (பிறைவேட்) லிமிடெட் ஆகியவை பொதுமக்களிற்கு அநீதி இழைப்படாதவிதமாக மின் பட்டியல் தயாரிப்பது தொடர்பாக செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக அறிவித்துள்ளன.

இந்த நிலையில், மின்சாரக் கட்டணங்கள் தொடர்பாக இன்னும் தீர்க்கப்படாத சிக்கல்கள் இருந்தால், அவற்றைத் தெரிவிக்க இரண்டு தொலைபேசி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. 0112 392 607, 0112 392 608 ஆகிய தொலைபேசி எண்களிற்கு அறிவிக்கலாம். அல்லது 0770 126 253க்கு வைபர், வட்ஸ்அப் அல்லது ஐஎம்ஓக்கு அனுப்பலாம் அல்லது இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அதிகார பூர்வ வலைத் தளத்தைப் பார்வையிட்டு புகார் செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)


**வேலையாட்கள் தேவை**

யாழ்.நகரில் உள்ள அச்சகம் ஒன்றிற்கு கணனி தட்டச்சு மற்றும் CorelDrawவில் தேர்ச்சியுள்ள பணியாளர் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர் ஒருவரும் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

**077 282 4321**
**021 222 9468** (2959)

**வேலையாட்கள் தேவை**

- **களஞ்சியப் பொறுப்பாளர்** கணணி அறிவுடைய 40 வயதுக்கு மேற்பட்டவர்
- **பணம் வசூலிப்பவர்** (Sales வாகனம்)
- **உதவியாளர்** (Sales வாகனம்)

யாழ்ப்பாணம் / திருநெல்வேலி / கோண்டாவில் / கொக்குவில் / இருபாலை ஆகிய இடங்களில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (2947)

தொடர்புகளுக்கு:-
**077 009 0189**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

**விரைவு பொதிகள் சேவை**
**V2 TRAVELS**
வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-92524)
**0768226240**

உடனடி
**வேலைவாய்ப்பு**
**தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருப்பவரா?**
உங்களுக்கு பொருத்தமான தொழில் வாய்ப்பினை வழங்க நாங்கள் தயாராகவுள்ளோம்.
எங்களிடமிருந்து உங்களுக்கு...
- நாளாந்தம் 750 - 1500 ரூபாயினையும்
- மாதாந்தம் 20000 - 25000 ரூபாயினையும் பெற்றுக் கொள்வதோடு EPF, ETF, தங்குமிட வசதிகளும் ஒழுங்கமைத்துக் கொடுக்கப்படும். (2963)

மேலதிக விபரங்களுக்கு கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
**0769393965, 0776953242**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.